REGD. M. 46

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 16—5—48 | இதழ் 4

## வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது

—✲—

"நம் இழிவு நீக்கம், நம் முன்னேற்றத்தடை நீக்கம், ஆரியத்தில், மூட நம்பிக்கையில் இருந்து விடுபடுதல், பகுத்தறிவாளர்களாக, மானமுள்ள சமுதாயமாக ஆவது, இப்படிப்பட்ட நம்வேலை நெருப்போடு பழகுவது போல் பாமர மக்களிடம் பழகுவதாகும். அவர்கள் நம்பிக்கையைப் பெறவேண்டும். அவர்களைத் திருத்தியே ஆகவேண்டும். இதற்கு நல்ல பிரச்சாரம் வேண்டும், ஒத்துழைப்பு வேண்டும், ஒன்றுபட வேண்டும். நிலைகுலைந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கும் மக்களை ஒன்றுசேர்த்து யாவர்பலத்தையும் ஒன்றாய்த்திரட்டி ஒரு மூச்சுப் பார்த்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இனி நாம் சூத்திரர்களாக வாழமாட்டோம் என்பதே நமது இலட்சிய சொல், நமது மூச்சு.

வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது. அது கானல் நீரல்ல. கருத்தும் கவலையும் இருந்தால் கண்டிப்பாக அடைந்தே தீருவோம் என்கிற உறுதி எனக்கு உண்டு."

பெரியார்.

8—5—48

## இன்று நடைப்பதை

16-ம் பக்கத் தொடர்ச்சி

மாகாணக்காரர்கள் கொள்ளைக் கூட்டத்தார் போல் வந்து சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திச் சத்துக்களைச்சுரண்டிக் கொள்ளை கொண்டு போவதைப்பற்றியும் கவலை ஏற்பட முடியாதவர்களாக ஆகிவிடுவதோடு, ஒருசமயம் கவலை ஏற்பட்டாலும் கூட அதற்கு நம் எதிரிகளால் துவேஷ உணர்ச்சி என்று பேர் வைக்கப்பட்டு, "தேசபக்தி"க் கூட்டத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு விடுகிறோம். எப்படிஎனில், இப்போது நாம் உண்மையிலேயே பார்ப்பனர்களை விடச் சமுதாயத்தில் கீழ்ப் படுத்தப்பட்டவர்களாயிருந்து, பழக்கம், வழக்கம், ...ம், சலுகை ஆகியவைகளில் ...பட்டிருந்து கொண்டு தாழ்ந்த நிலையில் இருத்தப்பட்டு இருப்பதை மாற்றிக்கொள்வதற்கு ஆக என்றே கவலை கொண்டு நம் சமுதாயத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு நாம் செய்யும் முயற்சிக்கு இன்று வகுப்பு துவேஷக்கூட்டம், வகுப்புதுவேஷக் கட்சிஎன்று பெயர் ஆகி, தேசியத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள் என்கின்ற பெயர் இடப்பட்டு, எப்படி அது சர்க்காராலும் கூட அனுமதிக்கப்பட்டுவிட்டதோ, அதுபோல் நாம் இந்தியர், பாரதியர், இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு திராவிட நாட்டுப் பாதுகாப்பை, நலனைப் பற்றிச் சிந்தித்தால் கண்டிப்பாக அது தேசத் துவேஷம், நாட்டுத் துவேஷம் கொண்ட கட்சி என்று பழி சொல்லப்பட்டுவிடும் என்பதோடு, நாமும் அலட்சியப்படுத்தப்பட்டவர்களாக ஆகிவிடுவோம் என்பதில் ஐயம் இல்லை.

நாம் மிகக் கீழான நிலையில், மிக்க இழிவான தன்மையில் அழுத்தப்பட்டு இருக்கிறோம். நமக்குச் சட்ட சபையில் இன்று வேலையில்லை; செல்லவும் முடியாது; அங்கு சென்றாலும் பேச்சு விளம்பரம் தவிர வேறொன்றும் செய்ய முடியாது; அதையும் எதிரிகள் தங்களிஷ்டம்போல் திருத்திவிடுவார்கள். அரசாங்கமும் தீர்மானத்தைத்தான் லட்சியம் செய்யுமே தவிர, பேச்சை லட்சியம் செய்யாது. ஆகவே பயனற்றதும், முடியாததும், நம் நிலையை, கொள்கையைப் பாழ்படுத்திக் கொள்வதுமான தேர்தலில் சம்பந்தப்பட்டு மானமழிந்து வாழக் கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களிடம் நம்பிக்கைபெறுங்கள்; மக்களை ஒன்றுபடுத்துங்கள்; மக்கள் பலத்தை ஒன்று திரட்டுங்கள்; தியாகத்திற்கும், தந்நல மறுப்புக்கும் மக்களைத் தயார் செய்யுங்கள்; அதற்கு வழி காட்டுங்கள். நீங்காத, நீண்ட நாளைய இழிவை நீக்கிக் கொள்ள நம்முடைய எதையும் விடவும், எப்படிப்பட்ட கஷ்டத்தையும் அனுபவிக்கவும் தயாராயிருங்கள்."

●

**தொடர் கதை** — **கற்பனைச் சித்திரம்**



[2—5—48 தொடர்ச்சி]

இன்னும்கொஞ்சம்பெரிதாகட்டும். இது போதாது. இன்னும் கொஞ்சம் வேண்டும் என்று ஊதி ஊதிப்பெலூனைப் பெரிதாக்குகிறார்களே சிறுபிள்ளைகள், கடைசியில அது டபீர் என வெடித்துப் போகிறதல்லவா? அது போலாயிற்று என் மகிழ்ச்சி. நான் குற்றாலத்திலே வேடிக்கையாக வாழ்ந்து கொண்டு, ஜெமீன்தாரின் கொட்டத்தை அடக்கியதாக எண்ணிக் கொண்டு இறுமாந்து இருந்தேன். என் வேலைத்திறன் முதலிலே அந்த ஜெமீன்தாருக்கு வேதனையாகத்தான் இருந்தது. சில நாள் படுத்த படுக்கையாகவே இருந்தார் என்று அக்காவிடமிருந்து கடிதம் வந்தது. ஆனால் பிறகு அவர், பழையபடி தமது "கொடுக்கை" காட்ட ஆரம்பித்தாராம். அம்மாவும் அக்காவும் முதலிலே இது பற்றி எனக்குக் கடிதம் எழுதவில்லை. கொஞ்சநாள் கழித்து ஜாடை மாடையாக எழுதினார்கள். பிறகு விஷயம் பூராவுமே தெரிவித்தார்கள். நாங்கள் வாங்கிய நிலத்தைப்பற்றி ஜெமீந்தார் கட்டிவிட்ட வழக்கில் எங்களுக்குப்பிரதிகூலமாகத்தீர்ப்புக்கிடைத்ததாம். அக்காவுடைய விலையுயர்ந்த நகைகளை ஜெமீன்தார்வீட்டுப்பந்துக்கள் இரவல் வாங்கிக்கொண்டு போனார்களாம், திருப்பித் தரவில்லையாம். கோர்ட்டிலே கற்பூரத்தை ஏற்றி அணைத்துச்சத்தியம் செய்தார்களாம் நகை இரவல்வாங்கவே இல்லைஎன்று. காலிகளின் தொல்லை அதிகரித்து விட்டதாம். குற்றாலமே வந்து விடலாமா? என்று கேட்டிருந்தார்கள். நான் இளைய பூபதியைச்சரிப்படுத்தி, அவரை அழைத்துக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தேன். இது ஜெமீன்தாரின் கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. தன்மகளுக்குமணாளனாக வரவேண்டியவன் தன் கண்ணெதிரிலேயே எங்கள் வீட்டில் வாழ்வதைப் பார்த்தால் அவருக்கு ஆத்திரமாகத்தானே இருக்கும். அவருடைய ஆத்திரத்தைக் கிளப்புவது ஒரு விதத்தில் எங்களுக்கு ஆபத்து என்ற போதிலும், ஒரு விதத்திலே எனக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது. மறைமுகமாக எதிர்ப்பதைவிட நேருக்கு நேர் நின்று போர் புரிவது ஆண்மையல்லவா! அது போல் இருந்தது என் நிலை. ஒரு ஜெமீன்தாரின் கோபத்தை நாங்கள் சமாளிக்க முடியாது. ஆனால் எங்களுக்கும் அந்த ஜெமீன்தாரின் கோபத்துக்கும் இடையே இளைய பூபதி இருந்தார். கோபம் என்ன செய்யும்? கேடயம் இருக்கும்போது கத்திக்குப் பயப்படுவானேன். அதிலும் இளைய பூபதிக்கு நான் ஊட்டி வந்த ரோஷ உணர்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. இருதாரப்பிலும் செலவுதான். இருதரப்புக்கும் ஆள்

(12-ம் பக்கம் பார்க்க)

# 18-வது திராவிடர்கழக மாகாண மாநாடு

## தூத்துக்குடியில் சிறப்பாக நடைபெற்றது

### இலட்சக் கணக்கில் மக்கள் கூடினர்

## தலைவர் பெரியார் அவர்களின் பேருரை

18-வது திராவிடர்கழக மாநாடு 8, 9—5—48 தேதிகளில் தூத்துக்குடியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஆண்களும் பெண்களுமாக இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். மலேயா, இலங்கை, மைசூர், கொச்சி முதலான ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். கருப்புடை அணிந்த பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் புடைசூழத், தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். வெள்ளம்போல் திரண்டு வந்தகூட்டம் வசதியாக இருந்து மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் முறையில், மாநாட்டுப் பந்தல், வ. உ. சி. மைதானத்தில், 'அரச்சுனன் பந்தல்' என்ற பெயருடன் அழகாக அமைக்கப்பட்டுத், தாய்மார்களுக்குத் தனியான இடவசதியும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மாநாடு,பகல்11-மணிக்கு ஆரம்பமாயிற்று. தோழர் K. K. நீலமேகம் அவர்கள் கொடியேற்று விழாவினை நடத்தினார்.

“இக்கொடியானது திராவிட இனத்தின் இழிவை நீக்குவதற்காக ஏற்பட்ட சின்னமாகும் என்பதைத் தாங்கள் எல்லோரும் அறிவீர்கள். அதன் தத்துவத்தைப்பற்றி விளக்கிக் கூறவேண்டிய அவசியம் இருக்காது என்று எண்ணுகிறேன். ஒவ்வொரு தேசத்தின் பாலுள்ள ஒரு கொள்கையைக் கொண்ட மக்களுக்கும் ஒவ்வொரு கொடிஉண்டு. அந்தந்த நாட்டு மக்கள் தங்கள் சமுதாய இழிவும், அரசியல் அடிமைத்தனமும் போவதற்கு அந்தந்தக் கட்சிக் கொடியின் கீழ்நின்று போராடி விடுதலை பெற்றிருக்கின்றனர். அதுபோல் நாமும் திராவிடர் கழகத்தின் இக்கொடியின் கீழ் நின்று நம்முடைய சமுதாய இழிவுநீக்கமும், நாட்டுப்பிரிவினையும் பெறவேண்டிய நிலையிலிருக்கிறோம்.

சுமார் 2000 ஆண்டுகளாக நமது திராவிட சமுதாயமானது, இழிவு கற்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாகவுள்ள இதிகாசங்கள், புராணங்கள், காவியங்கள் எல்லாம் நமது சமுதாயத்திலிருந்து நீக்கப்படவேண்டும். இவ்வாறு நீக்குவதற்குப் பொறுப்பெடுத்துக்கொண்டு வேலை செய்வது நமது திராவிடர்கழகம் ஒன்றேயாகும். அதற்கு ஏற்பட்ட கொடிதான் கருப்பில் சிகப்புச் சின்னம் கொண்ட கொடியாகும். அக்கொடியின் கீழிருந்து நமது இழிவு நீங்கும் வரையில் போராடித் தீருவோம் என்று உறுதிமொழியளிக்கும் நாளே இன்னாளாகும். அக்கொடியை முதன் முதலாக நிர்ணயித்துக் கொடுத்த, நம் பெரியார் இங்கு வீற்றிருக்கிறார். திராவிட இன மக்களாகிய நாம் இந்தக் கொடியின்கீழ் நின்று நம்முடைய உரிமைகளை அடைவதற்கு எப்பொழுதும் உறுதிகொள்ள வேண்டும். இவ்வாறு உறுதி கொண்டால் நம்முடைய லக்ஷியத்தை நாம் அடைவதற்கு முடியும் என்பது திண்ணம். இதர மேல் நாடுகளில் அரசியலைக் கைப்பற்றிச் சட்டமூலமாக சீர்திருத்தங்களைச் செய்தார்களெனில், நமது பெரியார் அரசியல்மூலம் சட்டம் செய்யப்படாமலேயே இந்த நாட்டு மக்களுக்குச் செய்த பகுத்தறிவுத் தொண்டினால் பல சீர்திருத்தங்களில் வெற்றி பெற்று நடைபெற்று வருவதை அறிவீர்கள். ஒவ்வொரு தோழர்களும் இக்கொடியை தங்களின் உயிருக்குச்சமமாகக் கருத வேண்டும். எவ்வித கஷ்டநஷ்டங்கள் வந்தாலும் நம்முடைய லக்ஷியத்தை அடையும் வரையில் இக்கொடியின்கீழ் நின்று போராடுவதென்ற உறுதிகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில்நான் பெரியார் அவர்களின் தொண்டில் நம் தலைவர் அவர்களின் கட்டளைக்குக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுகிற தொண்டனேவேன். அதன்படியே தாங்களும் தலைவர் அவர்களின் கட்டளையைச்சிரமேற்கொண்டு பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒருவார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். நம்மை இழிமக்களாகக் கருதுகிறவர்களையும், நம்முடையசமுதாய இழிவுகளை நீக்கும் நம் தொண்டிற்குத் தடையாயிருப்பவர்களையும் நாம் வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வெறுக்கக் கற்றுக்கொண்டால் தான் நாம் நம்முடைய முயற்சியில் வெற்றியடைய முடியும்.” என்ற வீரவுரையாற்றிக் கழகக்கொடியை ஏற்றிவைத்தார்.

பின்னர் தோழர் டி. பி. வேதாசலம் அவர்களின் சொற்பொழிவுடன் மாநாடு திறந்துவைக்கப் பட்டதும், பகல் உணவுக்காக மாநாடு கலைந்தது. பிற்பகல் மாநாடு கூடியதும், மாநாட்டின் தலைவராகப் பெரியார் அவர்களைத், தோழர்கள் வி. சின்னத்தம்பி, டி. சண்முகம், வேலூர் திருநாவுக்கரசு, இராமாமிர்தத்தம்மையார், ஆசைத்தம்பி, சென்னை கே. கோவிந்தசாமி, திண்டுக்கல் எம். ஆர். மத்திரன், விருத்தாசலம், சி. முனிசாமி, சேலம் ஜெகதீசன், குடந்தை டி. ஆர். பொன்னுசாமி, கே. வி. அழகிரிசாமி, எம். ஆர். இராதா, திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் முன்மொழிந்தும், வழிமொழிந்தும் ஆதரித்துப் பேசியதும் தலைவர் பெரியார் அவர்கள்பெருத்தகைதட்

டுதலுக்கிடையே எழுந்து தம்முடைய தலைமைப் பிரசங்கத்தை மூன்று மணிநேரம் ஆர்வத்தோடு பேசினார். காந்தியடிகளின் மறைவு திராவிட மக்களுக்குப் பெருத்த நட்டமும் ஏமாற்றமும் என்பதைக் குறித்து விரிவாகப் பெரியார் அவர்கள் தம்முடைய தலைமையுரை ஆரம்பத்தில் குறிப்பிட்டு விட்டுப், பின்னர் கழக சம்பந்தமான தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார். தலைமையுரையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

“நான், திராவிடகழகத்தை அது ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரோடு இருந்தகாலத்தில் இருந்ததுபோல் இது ஒருகட்சியல்லவென்றும், திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும் 10 ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். அதனாலேயே திராவிடர்கழகத்தை மக்கள் ஒரு கட்சி என்று கருதாமல் இயக்கம் என்றே கருதவேண்டும் என்பதற்கு ஆக, அதற்கு ஏற்றபடி கழகத்தை ஒரு பிரச்சார ஸ்தாபனமாகச் செய்து வருகிறேன். ஏன் என்றால் 1925-ல் நாம் ஆரம்பித்து நடத்தி வந்த சுயமரியாதை இயக்கம்தான் ஜஸ்டிஸ் கட்சியைக் கைப்பற்றி இப்பத்தாண்டுகளாக இயக்கப் பிரசாரம் செய்து வருகிறதே ஒழிய, இது ஒரு தனிக்கட்சியாளர் கையில் இல்லை. சுயமரியாதை இயக்கத்தின் திட்டங்களில் ஏதாவது ஒரு சிறு மாறுதல் காணப்பட்டால் காணப்படலாமே ஒழிய, சுயமரியாதை இயக்க அடிப்படையிலும் அதன் தலையாய கொள்கைகளிலும் திராவிடர் கழகத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. இதைச் சேலம் மாநாட்டிலேயே அண்ணாத்துரை தீர்மானம் தெளிவுபடுத்தி ஆய்விட்டது. ஆகவே ஜஸ்டிஸ் கட்சி எந்த மக்களுக்கு ஆக என்று தோற்றுவித்து நடத்தி வரப்பட்டதோ, அந்த மக்கள் (திராவிட மக்கள்) சுயமரியாதை இயக்கத்தை அப்படியே ஒப்புக்கொண்டு பெரிதும் சுயமரியாதைக்காரர்களாக ஆகிவிட்டார்கள் என்பதும், சுயமரியாதைக்காரர்கள் அல்லாதவர்களாய் இருந்தவர்கள் மெல்ல நழுவி விட்டார்கள் என்பதும் தான் கருத்தாகும். எனவே சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகம் என்னும் பேரால் பெரிதும் தன் இயக்கப் பிரசாரவேலையே செய்து வருகிறது என்று சொல்லலாம். அதனால் தான் நான் அடிக்கடி திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும் இது காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட், இந்துமகாசபை, வருணாஸ்ரம சுயராஜ்ய சங்கம், பிராமண பாதுகாப்புச் சங்கம், மிதவாத சங்கம், முஸ்லீம் லீக், கிறிஸ்தவ சங்கம், தாழ்த்தப்பட்டவர்கள், ஷெடியூல்லீக் முதலாகியவை போலும் ஒருகட்சி ஸ்தாபனமல்ல என்று சொல்லுகிறேன். எப்படி எனில் இக்கழகம் மக்கள் அறிவுத் துறையிலும், சமுதாயத்திலும், மதத் துறையிலும், கடவுள் துறையிலும் நீண்டநாட்களாக இருந்துவரும் மடமைகளையும், முன்னேற்றத்தடைகளையும், குறைபாடுகளையும் நீக்கவும், மக்கள்யாவரையும் ஒன்றுபடுத்தி ஒரு சமுதாயமாக ஆக்கவும், சிறப்பாக நமக்குத்திராவிடமக்களுக்குஇருந்து வரும் சமுதாய இழிவு, மதமூடநம்பிக்கை, ஜாதிப்பிரிவு வேறுபாடு அடியோடுஅழிக்கப்பட்டு, ஆரியக்கொடுமையிலிருந்து மீளவுமே பாடுபட்டு வரும்படியான அதாவதுமக்களுக்கு வலியுறுத்தி வரும்படியான ஒருஸ்தாபனமாகும்.

திராவிடர் கழகத்திற்கு சுயராஜ்யம் பெறவேண்டுமென்கிற ஒரு கற்பனைத் தத்துவமோ, தேர்தலுக்கு நின்று மெஜாரிட்டியாகி “அரசியலைக்” கைப்பற்ற வேண்டும் என்கிற தப்புப் பாவனையோ இல்லை. ஏனென்றால் இன்று நாட்டில் நடப்பது சுயராஜ்யம் என்றுதான் சொல்லப்படுகிறது. அன்னியனான வெள்ளையன், (பிரிட்டிஷார்) ஆதிக்கம் போய் விட்டது. திராவிட நாட்டுக்கு திராவிட மக்களே முதல் மந்திரி, இரண்டாம் மந்திரி, மொத்தத்தில் 13ல் 10 மந்திரி திராவிடர்கள் என்று சொல்லும்படியான திராவிட மெஜாரிட்டி மந்திரி சபையாக இருக்கும் போது, இனிச்சுயராஜ்யம் பெறுவது என்பதற்கு வேறு கருத்து என்ன இருக்கமுடியம்? யார்பெறுவது? அரசியலைக் கைப்பற்றுவது? யாரிடமிருந்து யார் கைப்பற்றுவது? திராவிட மக்கள் அல்லாதவர்கள் கைக்கு இனி அரசியல் எப்படிப் போகும்? ஆகவே சுயராஜ்யம் பெறுவது என்பதோ, அரசியலைக் கைப்பற்றுவது என்பதோ, இனி அர்த்தமற்ற பேச்சுகளாகும். அர்த்தமற்ற காரியங்களுமாகும்.

இந்த மாகாணத்தில் இனி நாம் தான் 100-க்கு 90-க்கு மேற்பட்ட ஓட்டர்களாகவும் ஆக்கப்படப் போகிறோம். பெரும்பாலான மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள், திராவிடர்களாகத்தான் இருக்கப்போகிறார்கள். அதில் சந்தேகம் இருக்க நியாயமில்லை. ஆனால் இதில் என்ன குறைசொல்லலாம் என்றால், இதனால் திராவிடநாடு பிரிந்துகிடைக்குமா? திராவிடர் கழக கொள்கைகள், திட்டங்கள், நடைமுறைக்குவருமா? என்பதுவேயாகும். சுலபத்தில் வராது என்று வைத்துக்கொள்ளலாம். ஆனால், நாம் திராவிடர் கழகத்தார் சட்டசபைக்குப் போய்விடுத்தாலோ அரசியலைக் கைப்பற்றுவதாலோ, மந்திரிகளாய் விடுவதாலோ, திராவிட நாடுவந்துவிடுமோ, திராவிடர்கழகக் கொள்கைகளும் திட்டங்களும் அரசியல்மூலம் நடத்தப்பட்டுவிடுமோ? என்று பார்த்தால் இன்றைய நிலைமையில் அவை சுலபத்தில் ஆகக்கூடிய காரியங்கள் அல்ல என்பதே நமது கருத்து.

## சட்டசபைப் பிரவேசம்

முதலாவது நம்மால் (திராவிடர் கழகத்தாரால்) மெஜாரிட்டியாய் சட்டசபைக்குச் செல்லமுடியாது. செல்லமுயன்றால், நம் கழகத்தார் தாங்கமுடியாத பெருஞ்செலவு ஒரு பக்கம் இருந்தாலும், பெரும் போராட்டம் நமக்குள்ளாகவே ஏற்படும். எதிரிகள் வசமிருக்கும் திராவிடர்கள் அத்தனை பேரும் நமக்கு எதிரிகளாய் இருந்து நமக்குத் தொல்லைகொடுத்து நம்மைத் தோற்கடிப்பார்கள். எதிரிகளுக்கு, நமக்கு தொல்லைக் கொடுக்கவும், விஷமப் பிரச்சாரம் செய்யவும் இன்று வசதிகள் அதிகம். காலித்தனம், குழப்பம் ஏற்படுத்தத், தகுந்தபடிநம் ஆட்களே தாராளமாய் அவர்களிடம் இருக்கிறார்கள். ஓட்டர்களுக்கு, நாம் நிற்பதானால் நமக்கு ஓட்டு செய்யும்படியாகப் போதியஅறிவு இன்னமும் ஏற்பட்டுவிட்டதாகச்சொல்லமுடியாது. நாம் அரசியலில் போட்டி போடுவதில்லை என்பதினாலேயே பணமூட்டைகள், சந்தர்ப்பவாதிகள், சுயநலமிகள், நம்மைவிட்டுப் போய்விட்டார்கள் என்பதோடு எதிரிகளின் தொல்லையும் ஒரு அளவுக்கு குறைந்தது. மக்கள் மனம் மாறும்படியான காரியம் செய்ய நாம் பிரச்சாரத்திற்குத்தாராளமாய் இடம் கிடைத்து வருகிறது. நம்மைவிட்டுப் பிரிந்து எதிரிகளின் வசத்தில் இருக்கும் நம்

(13-ம் பக்கம் பார்க்க)

## 18-வது திராவிடர் மாநாடு

14-ம் பக்கத் தொடர்ச்சி

பெரியார் அவர்களின் தலைமைப் பேருரையுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாம் நாள் மாநாடு ஆரம்பமானதும், படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தோழியர் குஞ்சிதம் குருசாமி அவர்கள் நாகம்மையார் படத்தையும்; தோழர்எஸ். குருசாமி அவர்கள் வ. உ. சி. படத்தையும்; தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் செல்வம் படத்தையும்; தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் தாலமுத்து—நடராசன் படத்தையும்; தோழர்ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் திராவிடநாடு படத்தையும் திறந்து வைத்தனர்.

காந்தியடிகளின் படத்தைத்தலைவர் பெரியார் அவர்கள் திறந்து வைத்தார்.

தோழர்கள் என். வி. நடராசன், மு. கருணாநிதி, மா. இளஞ்செழியன், சி. பி. சிற்றரசு ஆகியோர் பல திறப்பட்ட ஆக்க வேலைகள் குறித்து மாநாட்டில் பேசினார்கள்.

கருவூர் வழக்கு நிதிக்காக ரூபா 951—0—0 மாநாட்டில் வசூலாயிற்று.

தலைவர் அவர்களின் இரண்டுமணி நேரச்சொற் பொழிவுடனும், தோழர் கே. வி. கே சாமி அவர்களின் நன்றிகூறலுடனும் மாநாட்டு இரண்டு நாள்நிகழ்ச்சிகளும் இனிது முடிவுற்றன.

இரண்டாம் நாள் இரவு தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் தலைமையில் நடிகவேள் எம். ஆர். இராதா அவர்களின் நாடகம் சிறப்பாகநடைபெற்றது.

தூத்துக்குடி மாகாண மாநாட்டுக்கு வந்திருந்த அனைவருக்கும் தங்கும் வசதிகளையும், உணவு வசதிகளையும் மாநாட்டு வரவேற்புக் குழுவினர் மிகவும் சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

மாநாட்டில் திராவிடர்கழக சம்பந்தமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

உலக உத்தமர் காந்தியார் அவர்கள் எதிர்பாராத விதமாகக் கொலை செய்யப்பட்டதைக் கண்டிப்பதோடு அன்னார் மறைவுக்கு இம்மாநாடு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

திராவிடநாட்டைத் தனிச் சுதந்திர நாடாக்குவதே திராவிடமக்களின் முடிவான அரசியல் கோரிக்கை என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

இந்திய அரசியல் நிர்ணய சபை என்ற பெயரால் டில்லியில் கூடுகின்ற சபை திராவிட மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதல்லவென்றும்; திராவிட மக்களை எவ்வகையிலும் கட்டும்படுத்தக்கூடியன வல்லவென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

கருஞ்சட்டைப்படை என்று ஓர் தனியான ஸ்தாபனம் இல்லை என்று தலைவர் பெரியார் அவர்கள் 3—3—48-ல் விடுத்த அறிக்கையை இம்மாநாடு ஆதரிப்பதுடன் கருஞ்சட்டைப்படை என்று ஒரு ஸ்தாபனம் இருப்பதாகக் கருதி சர்க்கார் 2—3—48-ல் விடுத்துள்ள அறிக்கையானது பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தவறானஎண்ணங்களை உண்டுபண்ணுவதால் மேற்படி உத்தரவை சர்க்கார் உடனே ரத்து செய்யவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

மாகாணத்திலுள்ள எல்லா உணவு சிற்றுண்டி விடுதிகளையும் சர்க்காரே ஏற்று நடத்துமானால் சர்க்காருக்கு வருமானம் அதிகமாவதுடன் மக்களுக்கு நல் லுணவு கிடைக்குமாதலால் சர்க்கார் இச் செய்கையை ஏற்று நடத்த முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறது.

சாதிகள் என்பவையே இந்நாட்டிலிருந்து ஒழிக்கப்படும்வரை சாதிவாரி பிரதிநிதித்துவ முறை அரசாங்க அலுவல்களில் நிரந்தரமாக இருந்துவரவேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள் பெரும் அளவுக்கு நிறைவேறியிருப்பதையொட்டி இம்மாநாடு மகிழ்ச்சி அடைவதோடு தமிழ்நாடு தவிர்த்த இதர ஆந்திர, கேரள, கன்னடிய பிரதேசங்களில் பிரசாரம் துவக்கப்படுவதை அடுத்த முக்கிய திட்டமாகக் கொள்ளவேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

திராவிடநாட்டிலுள்ள பிரஞ்சுப் பகுதிகள் திராவிடநாட்டுப் பிரிவினை ஏற்படும் பொழுது திராவிட யூனியனில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்று பிரஞ்சிந்திய திராவிட மக்கள 18-வது திராவிட கழக மாகாண மாநாட்டை கேட்டுக் கொள்கிறதென்று வந்துள்ள செய்தியைக் கண்டு இம்மாநாடு பிரஞ்சிந்தியமக்களுக்கு நன்றியறிதலைத்தெரிவித்துக்கொள்கிறது.

இனம் ஒழிப்புச்சட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்றி சிறியதாயிருந்தாலும், பெரியதாயிருந்தாலும், மதசம்பந்தமானதயிருந்தாலும் மத சம்பந்தமற்றதாயிருந்தாலும் எல்லா இனங்களையும் ஒரேயடியாக ஒழித்துகட்ட வேண்டுமென்று இம்மாநாடு சென்னை மாகாண அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

திராவிட நாகரீகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உரிமைக்கும் விடுதலைக்கும் தடையாகவும் புறம்பாகவும் உள்ள பேச்சுவழக்கற்ற வடமொழியைத் திராவிட நாட்டுப் பள்ளிகளில் கட்டாயபாடமாக்கப் பார்ப்பனத் தலைவர்கள் பெருமுயற்சி செய்து வருகின்றதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறதுடன் அரசாங்கம் இதை அனுமதிக்கக்கூடாதுஎன்றும்தெரிவித்துக் கொள்கிறது.

பெரும் பான்மை மக்கள் படித்திராத நாட்டில் ஜனநாயகம் நிலவுவது என்பது கூடாத காரியம் ஆதலாலும், படித்திராத மக்களுக்கும் ஓட்டுரிமை அளிப்பதுவெறும் வேடிக்கைக் கூத்தாகவும் ஜனநாயகம் என்பது வெறும் கானலாகவும் தான் இருக்குமென்றும், ஆகவே திராவிட நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் கட்டாய ஆரம்பக்கல்வி அளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே இந்திய யூனியன் அரசாங்கமும் மகாண அரசியலதிகாரமும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர்கள் மற்ற ரெயில்வே தொழிலாளர்களை விட மிகக் குறைந்த சம்பள விகிதங்களைப் பெற்று வருவதினால் புதிய சம்பள கிரேடுபடி தென்னிந்திய ரயில்வே தொழிலாளரின்சம்பளம் இதர ரெயில்வே தொழிலாளர் நிலைக்கு உயர்த்தி, பிறகு சம்பளக் கமிஷன் விவரங்களை அமுலுக்கு கொண்டுவருமாறு மத்திய அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஜஸ்டிஸ் கட்சி வேலைத்திட்டம் என்பதாக ஒவ்வொரு மாநாட்டிலும், ஒப்புக் கொள்ளப்பட்டுத் தீர்மானித்துவரும் வேலைத்திட்டத்தை இம்மாநாடு ஒப்புக் கொள்வதுடன் தற்கால நாட்டுமக்கள் நிலைக்கேற்ப அத் திட்டத்தை மாற்றியமைக்க மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு இம்மாநாடு அதிகாரமளிக்கிறது.

பெரிய நகரங்கள் தவிர கிராமங்களில் தனிப்பட்ட நபர்கள் யாரும் மக்களுக்கு இன்றியமையாத தேவைப் பொருள்களான தடித்தாகத் துணி. உணவு தானியங்கள், பருப்பு,எண்ணெய் பால்பொருள்கள் மாமிசவகை இவற்றை வியாபாரம் செய்ய அனுமதிக்கக் கூடாதென்றும் இவையெல்லாம் கூட்டுறவு பண்டகசாலை மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென்றும் நகரங்களில் கூட்டுறவு பண்டகசாலை தவிர தனிப்பட்ட நபர்களின் வியாபாரம், நீக்கப்பட வேண்டுமென்றும் ...ற கூட்டுறவு ...யை நாட்டில் வளர்க்க உதவுமென்றும், எனவே

சர்க்கார் இதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

நாட்டில் மத சம்பந்தமல்லாத ஆட்சி நிலவ வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு விட்டதால் பள்ளிக்கூடத்தில் மத சம்பந்தமான, புராண சம்பந்தமான பாடங்கள் கற்பிக்கப்படக் கூடாது என்றும், அரசாங்கம் பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பணம் எவ்வகையிலும் கொடுக்கக் கூடாதென்றும், கட்டாய இலவச ஆரம்பப் படிப்புக்கும் செகண்டரிபடிப்புக்குமே சகல பண உதவியும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இந்தி மொழி திராவிடநாட்டில் எந்த அளவிலும் உபயோகப்படுத்தக் கூடாதென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

எல்லாக் கல்லூரிகளிலும் போதனை முறை தமிழிலேயே இருக்கவேண்டுமென்றும் தொழிற் கல்லூரிகளிலும் இம்முறை அனுஷ்டிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

சமுதாய அமைப்பு முறையிலுள்ள கோளாறுகளும் சிலவகுப்புகளுக்கு பாரபட்சமான சலுகைகளும் சிலவகுப்பினருக்கு சலுகையின்மையும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகவே இருந்துவந்ததின் காரணமாக மேல் சாதி மக்களே அறிவுடைய மக்களாக ஆகவும் 100-க்கு 90 பேரான கீழ் சாதி மக்களாகக் கருதப்படும் திராவிடர்கள் அனைவரும் படிப்பறிவற்றவர்களாகவும் இருக்க நேர்ந்ததென்றும் இதைச் சரிப்படுத்த வேண்டுமானால் எல்லாக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் வகுப்புவிகிதாச்சாரத்தைஅனுசரித்து இடம் அளிக்கப்பட வேண்டுமென்றும் இம்முறை அனுஷ்டிக்காமலிருப்பது சகலருக்கும் சம சந்தர்ப்பம் வேண்டுமென்ற நியாயமான கொள்கைக்கு விரோதமானதென்றும் அதை அழிக்கக் கூடியதாகவே கருதப்படுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

நாடகம் சினிமா ஆகிய கலைகளின் மூலம் அறிவிற்குப் பொருந்தாத கருத்துக்களையும் புராணக் கொள்கைகளையும் புகுத்தி மக்களை மடமையின் பாற்படுத்தும் கொடுமையை இம்மாநாடு கண்டிக்கிறது. பொதுமக்கள் அது போன்ற சினிமா நாடகங்களை ஆதரிக்கக் கூடாதெனக் கேட்டுக்கொள்கிறது.

இந்திய யூனியன் அரசாங்கம் தங்களது ஆட்சி மத சம்பந்தமற்ற (Secular) தென்று ஒப்புக்கொண்டுவிட்ட பின்னரும் மத விழாக்களுக்கு விடுமுறை விடுவது, மத ஸ்தாபன பரிபாலனமென்றும் ஒன்று வைத்து நடத்துவதும் மத சம்பந்தமான ஸ்தாபனங்களுக்கு பணஉதவி செய்து வருவதும் மதஸ்தாபன சொத்துக்களுக்கு சலுகைகள் அளிப்பதும் மத ஸ்தாபனங்கள் பேரால் உள்ளபெருவாரியான சொத்துக்களைப் பொதுமக்களுக்குப்பலனில்லாமல் இருக்க அனுமதிப்பதும் ஆகிய காரியங்கள் நடைபெறாதிருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமாய் சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

எல்லாத் தொழிற்சாலைகளிலும்தொழிலாளிகளுக்கு அவர்கள் பணம் செலுத்தாமலே மூலதனத்தில் 5ல் ஒரு பாகம் கட்டாயமாக ஒதுக்கப்பட வேண்டுவதுடன் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டால் தொழிலாளர் பிரதிநிதியும், முதலாளி பிரதிநிதியும் இருவராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரும் ஆக மூவர் அடங்கிய ஒரு போர்டாக அமைத்துத் தகராறு தீர்க்கப்படவேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

ஆதிதிராவிட மக்கள் தாங்கள் செய்துவந்த செய்துவருகிற இழி தொழில்களை இழிவுஎன்று கருதிவெறுத்துக்கொண்டு வருகிறார்கள். அவ்வித வெறுப்புக் கொண்ட கிராமங்களில், சாதி இந்துக்களால் பலகிராமங்களில் பெரும் கொடுமைகள் இழைக்கப்பட்டு கஷ்டப்பட்டு வருகின்றனர். இவைகளைத் தாழ்த்தப்பட்டோர், மந்திரியாருக்கு எடுத்துக் கூறியும் கவனிக்கப்படவில்லையென்று தெரிவதால், இனியாகிலும் இவ்விதம் நடக்காமலிருக்க ஆவன செய்யவேண்டுமாய் அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

திருவிதாங்கூர், கொச்சி மலபார் ஆகிய இடங்களில் நமது கழகப் பிரசாரம் இதுவரையிலும் நடைபெறாத காரணத்தால் உடனடியாக பிரசாரக்குழு நிறுவி நடைமுறை வேலைகளை ஆரம்பிக்கக் கட்டளையிடும்படி தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**இவையும் இன்னும்பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.**

# முயற்சி திருவினையாக்கும்

## ஓர் எடுத்துக்காட்டு

—✱—

**கீழ்வரும் விஷயங்கள் விஞ்ஞான சாஸ்திரக் கலாசாலையின் தலைவராயிருந்த ஏ. பி. கார்பின்ஸ் என்பவரின் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவை.**

வாலிபப் பொது உடமைச் சங்க அங்கத்தினர் பலர் சிறிது காலத்திற்கு முன்வரை அகில யூனியன் விஞ்ஞான வித்தியாசாலை மாணக்கர்களாயிருந்து இப்பொழுது சோவியத் விஞ்ஞானிகளின் திறமையைக் காட்டும் உதாரண புருஷர்களாயிருக்கின்றனர். அத்தகையவர்களில் பி. என். வால் என்பவர் ஒருவர். அவர் ஒரு கொல்லனுடைய குமாரர். 1938-ல் அவர் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் விஞ்ஞான சாஸ்திர கலை அபிவிருத்திசபையின் அங்கத்தினரும், கீர்த்திவாய்ந்த விஞ்ஞானியுமான ஜாபி என்பவரின் ரசாயன சாலையில் ஆராய்ச்சி வேலையில் இறங்கினார். மிகவுயர்ந்த அளவுக்கு மின்சாரக்கரண்டை உயர்த்தக்கூடிய 'நான் கண்டக்ட'ரில் வேலை செய்து கொண்டிருக்கிறார். அவர் வேலை அவருடைய தகப்பனாருடையதைப்போல் நெருப்புப் பொறிகள் பறக்கும் வேலையாகும். உலைக்கூடத்திலுண்டாகும் பொன்னிறமான நெருப்புப் பொறிகளல்ல; ஆனால் விஞ்ஞான ரசாயன சாலையின் நீல நிறமான மின்சாரப் பொறிகளாகும்.

பிளேக் நோயைக் குணம் செய்வது, நோயில்லாமல் குழந்தை பெறுவது முதலிய பெரிய விஷயங்களை மற்ற சோவியத் இளம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகள் ஐ. சோ. சோ. ரஷ்யா முழுவதிலும் கையாளப்பட்டு வருகின்றன. அவர்கள் இரத்த சக்தியைப் பாதுகாப்பதில் அதிக முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்.

ஆர்க்டிக் பிரதேசத்தைப் பரிசோதிப்பதிலோ அல்லது பாலைவனங்களைச் செழிப்பான வயல்களாக்கும் வேலையிலோ எந்த இடத்திலும் சோவியத் வாலிப விஞ்ஞான சாஸ்திரிகள் இருப்பதைக் காண்கிறோம். இவர்களின் வெற்றி அடிக்கடி விஞ்ஞான உலகம் முழுவதையும் திடுக்கிடச் செய்கின்றது.

வேலைசெய்யும் நேரம் மிகவும் குறைவாயிருப்பதால் இளைஞர்கள், கலை, சமூக, விளையாட்டு விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளப் போதுமான நேரம் கிடைக்கிறது. நன்றாக வேலை செய்யவும் விளையாட

(11-ம் பக்கம் பார்க்க)

# பக்தனும் வெறுக்கும் பரமன் திருவிளையாட்டல்

—:(o):—

யாழ்வாசித்துப் பரிசு பெறுவதற்காக வடநாட்டிலிருந்து மதுரைக்கு வந்த ஏமநாதன் என்பவன் பாதி இராத்திரியிலேயே ஊரை விட்டு ஓடிப்போய் விட்டான் என்ற செய்தியைப் பாணபத்திரர் பாண்டியனிடம் சொல்ல, அது கேட்ட பாண்டியன், "அப்படியானால் நீர் சொக்கரையே பாடிக்கொண்டு இரும்" என்று கூறப்படும் நிகழ்ச்சி, பாணபத்திரரைப் பற்றி நாம், முன் கட்டுரையில் குறிப்பிட்ட கருத்துக்களை ஆதரிக்கும் முறையிலேயே உள்ளது. எப்படியென்றால், யாழ்வல்ல பாணபத்திரர் தம்முடைய சபையில் இருக்கும் போது, யாழ் வாசிப்பதில் ஆற்றல் பெற்ற எவர் வந்தபோதிலும், அவர்களையெல்லாம பாணபத்திரர் தன்னுடைய திறமையினால் வென்று விடுவார் என்றும், அது, தனக்கும் தன் நாட்டுக்கும் அழியாப் புகழை உண்டாக்கும் என்றும் மதுரை மன்னன் கருதியிருந்தான். ஆனால், அவனுடைய எண்ணம் கைகூடவில்லை. வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதன் பாதி இராத்திரியிலேயே ஓடிப்போய் விட்டான். இது, வரகுண பாண்டியனுக்கு உண்மையிலேயே வருத்தத்தையும் கவலையையும் உண்டாக்கியது. எனவே தான், பாண்டியன், பாணபத்திரரைத் தம்முடைய சபைக்கு வரவேண்டாமென்றும், சொக்கநாதரையே பாடிக்கொண்டிருமென்றும் கூறிவிட்டான். சொக்கநாதர் தம்முடைய திறமையினால் ஏமநாதனை வென்றுவிட்டார் என்ற செய்தியைக் கேட்ட பாண்டியன், ஏன் வெறுப்படைந்து, பாணபத்திரரைத் தம்முடைய சபையினின்றும் நீக்கினான் என்பதைச் சொக்கநாதனன்பர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சமயக் கோட்பாட்டின்படி, இந்நிகழ்ச்சி பெரிதும் வரவேற்றுப் போற்றப்படக் கூடியதாக இருந்தும், மதுரை மன்னன் அந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டதும் ஏன் வெறுப்படைந்தான்? "பாணபத்திரர், சொக்கநாதருடைய திருவருளை மிக எளிதில் பெறக்கூடியபேரன்பர் என்பது எனக்கு இதுவரை தெரியாமற் போயிற்றே! இப்படிப்பட்ட ஒரு சிவ அன்பரையா நான் சாதாரணமாக மதித்து என்னுடைய சபையில் வைத்திருந்தேன்! ஆ! கெட்டேன்! இனி, நீர் என்னுடைய சபையில் இருக்கத் தக்கவரன்று! என் அப்பன் சொக்கனைப் பாடிக்கொண்டிருப்பதே உமக்குத் தகுதியும் பெருமையுமாகும்" என்ற அன்பு முறையில் தான் பாண்டியன், பாணபத்திரரைத் தம்முடைய சபையினின்றும் நீக்கினான் என்று சில சைவ மெய்யன்பர்கள் கருதிக்களிப்பர். ஆனால், நிலைமை அப்படியன்று. உண்மையாகவே பாண்டியன், பாணரை வெறுத்தான்; அவர்மீது சினம் கொண்டு அவரைத் தன்னுடைய சபையினின்றும் விலக்கினான் என்ற உண்மை நன்கு புலனாகின்றது. எப்படியென்றால், பாண்டியனுடைய சபையைவிட்டு விலகிச் சொக்கநாதர் சந்நிதியில் போய்த் தங்கிய பாணரை வறுமை பெரிதும் வாட்டிற்று என்று சொல்லப்படுகிறது. பாணருக்கு இந்த வறுமை ஏற்படக் காரணம் என்ன? பாண்டியன், பாணரிடத்தில் அன்பு கொண்டவனாகவே இருந்தான் என்பது உண்மையாக இருக்குமானால், பாணர் வறுமையால் வாடக்காரணமே இல்லை. பாணருக்கும் சொக்கருக்கும் உள்ள நெருங்கிய அன்புத்தொடர்பைப் பாண்டியன் உள்ளபடியே உணர்ந்து, உவகை கொண்டவனாய் இருந்திருந்தால், தன்னுடைய சபையில் பாணர் எவ்வளவு செல்வத்தோடும் சிறப்போடும் இருந்தாரோ அதை விடப் பன்மடங்கு மிகுதியான செல்வத்தோடும் சிறப்போடும் இருக்கும்படி செய்திருப்பான். அவருக்கெனத் தனிமாளிகை அமைத்து அவரை அன்புடைவான ஆண்டவனுக்கு அடுத்தபடியாக வைத்து வழிபட்டுமிருப்பான். ஆனால், நடந்ததென்ன?

வரகுணபாண்டியன், பாணரைத் தம்முடைய சபையினின்றும் நீக்கியதோடு மட்டும் நிற்கவில்லை. பாணர் குடியிருந்த வீட்டைக்கூடப் பறிமுதல் செய்யுமளவுக்கு அவன் அவர் மீது சினம் கொண்டிருந்தான் என்று தெரிகிறது. எப்படியென்றால், பாண்டியனுடைய சபையை விட்டு விலகிய பாணர், சொக்கநாதா சந்நிதியிலேயே தங்கியிருந்து பாடிக் கொண்டிருந்தார் என்று பாணபத்திரர் வரலாற்றில் கூறப்படுகின்றது. மன்னன் சபையில் மதிப்போடு இருந்த பாணர், உணவுக்கும் உறையுளுக்கும் வகையின்றிச் சொக்கநாதர் சந்நிதியில் ஆண்டிக்கோலத்தில் இருக்கக் 'காரணம் என்ன? பாண்டியனுடைய நினைவு கனவாக மாறியதே இதற்குக் காரணம். வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதன் என்ற யாழ்ப் புலவனைப் பாணர் வென்று தனக்கும் தன் நாட்டுக்கும் புகழையும் பெருமையையும் உண்டாக்கிப், பாணரின் யாழ்வல்லமை தமிழ்நாட்டின் இசைக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும் என்ற சிறப்பையும் நிலைநாட்டுவார் என்று மன்னன் மகிழ்ந்தான். இந்த மகிழ்ச்சிப் பெருக்கே, ஏமநாதன் என்ற யாழ்ப் புலவன் வந்திருக்கின்றான் என்பதைக் கேள்விப்பட்டதும் உடனே பாணரை அணுகி, "ஏமநாதனுடன் பாடவல்லீரோ" என்று ஆர்வத்தோடு கேட்கும்படியும் செய்தது. ஆனால், ஏமநாதன் பாதி இராத்திரியிலேயே ஊரைவிட்டு ஓடிப்போய் விட்டான் என்பதைக் கேள்விப்பட்டதும் மன்னனுடைய மனம் உடைந்துவிட்டது. சொக்கநாதரே ஒரு விறகு தலையனாக வடிவெடுத்து வந்து யாழ் வாசித்து ஏமநாதனைப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்தார் என்ற புரட்டுரையை மன்னன் நம்ப மறுத்தான். எனவேதான், பாணரை நோக்கி, "நீர் என்னுடைய சபையில் இருக்கவேண்டாம், சொக்கநாதர் சந்நிதிக்கே போய் அங்கிருந்து கொண்டு, அவனையே பாடிக்கொண்டிரும்" என்று கூறி விரட்டிவிட்டான். ஏமநாதனுடன் யாழ்வாசித்துச் [illegible] அம்மையை [illegible] என்று கூறிய பாணபத்திரர், அவனோடு நேருக்கு நேர் இருந்து தம்முடைய புலமையைக் காட்டாமல், வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதனை எவரும் அறியாமல் ஓடும்படி செய்தது, உண்மையாகவே தமிழ் நாட்டுக்கும் தமிழ்க் கலைக்கும் தவிர்க்கமுடியாத இழிவையும் குறைவையும் உண்டாக்குவதாகும் என்று மன்னன் கருதினான். போலித்தனமான முறைகளாலோ அன்றிச், சூழ்ச்சிகளாலோ ஒருவனை

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 16—5—48 [ஞாயிறு

# தூத்துக்குடி

*

அவன் கரங்களிலே இரும்புச் சங்கிலி!

கால்களையும் இரும்புச் சங்கிலி கொண்டு, அசைக்கமுடியாத பாறையிலே கட்டிவிட்டனர்.

கண்களின்மீது கனமான ஓர் துணிக்கட்டு.

அவனைக் கண்டதும், அவன் ஓர் துர்ப்பாக்கியன், துயரத்துடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கிறான் —அடிமைச் சங்கிலிகள் அவனைக் கொடுமைக்காளாக்குகின்றன, என்பது விளங்குகிறது.

அவனைச் சுற்றிலும், மனித சஞ்சாரம் அதிகமற்ற இடம். தொலைவிலே, அலை ஓசை கேட்கிறது.

கடும் காற்று வீசுகிறது.

மழையும் பொழிகிறது.

அவன் நெளிகிறான்—

அவன் பொருட்டுப் பேசுவோர் இல்லை!

கட்டுகளை அவிழ்த்துவிடும் கண்ணியம் கொண்டவர் இல்லை.

ஏன் இந்நிலை பிறந்தது என்று கேட்கும் வீரன் இல்லை. அவனோ, நெளிகிறான்—தன் பலத்துக்கு மீறிய பலத்தால் அழுத்திவைக்கப்பட்ட அவனால் நெளியமட்டுமே முடிகிறது.

ஒரு உதவி! ஒரு அபயக் குரல் கேட்குமா, என்று ஆவலுடன், உற்றுக் கேட்கிறான். தொலைவிலே, ஓர் காலடிச் சத்தம், கேட்குமா என்று காத்துக் கிடக்கிறான்.

ஒரு அன்புமொழி, இரக்கச் சொல், நம்பிக்கையூட்டும்வார்த்தை, கிடைக்குமா என்று, ஆவலுடன் காத்துக் கிடக்கிறான்.

கண்களை மூடிக்கொண்டிருக்கும் துண்டுத் துணியையாவது, விலக்க, ஒருவர்கிடை 'கமாட்டாரா? என்று, எண்ணுகிறான்—நெளிகிறான்- நெளிகிறான் — நெளியும் நிலையிலேயே யோசிக்கிறான்; "இன்னும் சற்றுப் பலமாக—மேலும் கொஞ்சம் உறுதியுடன்—சோர்வு அடையாமல்—நம்பிக்கையை இழக்காமல், பிணைப்பிலிருந்து விடுபட முயற்சி செய்—இரும்புச் சங்கிலிதான்; ஆனால் எஃகு உள்ளம் இருக்கிறது உனக்கு, அஞ்சாதே, இதோ தளை அறுபடும் நிலை ஏற்பட்டுவிட்டது வீரனே! விசாரம் கொள்ளாதே!" என்று யாராவது, கூறமாட்டார்களா, ஆர்வம் தரமாட்டார்களா, என்று ஏக்கத்துடன் காத்திருக்கிறான். கடும் காற்றுத்தான் வீசுகிறது! அலையின் ஒலிதான் கேட்கிறது! அவன் எதிர்பார்க்கும் உதவிக்குரல் கிளம்பவில்லை. சிங்காரச் சிறுபடகுகளிலே ஏறிக்கொண்டு, வெகுதொலைவிலே, யாரோ செல்கிறார்கள் — அவர்கள் பாடும் சிந்து செவிக்கு வருகிறது.

வேறு எங்கிருந்தோ, குமுறல் சத்தம் கேட்கிறது. ஆனால் அவன் அருகே வருவார்யாருமில்லை! அவன் நிலையை மாற்றத் துணிவுகொள்வார் காணோம். அவன் அடிமை! அவன் அவதிக்காளானவன்! அவனுக்கு, உறுதுணையாக ஏதும் இல்லை!!

முப்பதாண்டுகளுக்குமுன்பு திராவிடன் இந்நிலையில் இருந்தான். ஜாதி மதம் எனும் தளைகளால் கட்டப்பட்டு, ஆரியமெனும் கற்பாறையிலே பிணைக்கப்பட்டு, அஞ்ஞானமெனும் துண்டுத் துணிகொண்டு, கண்கள் கட்டப்பட்டு, உலகம் மாறிக்கொண்டிருந்த நாட்களில், உரிமைப்போர் முழக்கம் எங்கெங்கோ கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில், விடுபடும் வழிவகை அறியாது, உதவிக்கோர் துணை கிடைக்காது, தன் பலத்துக்கு மேற்பட்ட பலத்தால் தாக்குண்டு, தத்தளித்துக் கொண்டிருந்தான். அவன் கரத்திலும் காலிலும் இருந்த தளைகளைவிட, அதிக பயங்கரமானதோர் தளை, அவன் கருத்திலே! திடீரென்று பூட்டப்பட்ட தளையுமல்ல—அவனுடைய வெள்ளை உள்ளத்தைச் சாதகமாக்கிக்கொண்டு, மெள்ள மெள்ள, கள்ளக் கருத்துக் கொண்டோர், பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பூட்டிய தளைகள். திக்குத் தெரியாத காட்டில், திரிந்து திகைக்கும் சிறுபறவைபோல, எந்தப் பக்கம் சென்றாலும் துறைமுகம் கிடைக்காது, கலங்கும் ஓடக்காரன் போல, தளைகளால் கட்டுண்டு தவித்துக்கொண்டிருந்தான்.

நெடுநாட்களாக இந்நிலை இருந்து வந்ததால் அவன், தன்னம்பிக்கையையும் இழந்துவிட்டான்.

நெளிவதைக்கூடக் குறைத்துக் கொண்டான். தன்மேல் பூட்டப்பட்டுள்ளவை, தளைகள் என்று எண்ணுவதையும் நிறுத்த முயற்சிக்கலானான். கண்களை மறைக்கும் துண்டுத் துணியையும் ஊடுருவித் தன் பார்வையைச் செலுத்த முயற்சித்துத் தோற்றதால், கண்ணுக்குப் பார்வை உண்டு, என்ற எண்ணத்திலேயே சந்தேகம் கொண்டுவிட்டான். நமக்கு விடுதலை இல்லை, விமோசனம் இல்லை—இவை அறுபடாத் தளைகள்—இது விடுபட முடியாத நிலைமை என்றேகூடத் தீர்மானித்துவிட்டான்.

இந்நிலையை மாற்றலாம்—மாற்ற முடியும்—மாற்றிக் காட்டுகிறேன்—என்றுகூற, இந்தத் தமிழகத்திலே, ஒருவர் மட்டும், துணிவு பெற்றார்—பணி புரியலானார்—படை ஒன்றைத் திரட்டினார்—கண்கள் மீதிருந்த துண்டுத்துணியைக் கிழித்தெறிந்தார்—தளைகளையும் நொருக்கலானார்.

நம்பிக்கையை இழந்து போயிருந்தவனுக்கு, முதலில் மிரட்சியே உண்டாயிற்று! "சாத்யமற்றகாரியத்தைச் செய்ய முன்வந்திருக்கிறாய்! முன்பு,என் கண்கள் மூடிக்கிடந்தன! தளைகள் உள்ளன என்ற நினைப்பு மட்டுமே இருந்தது—அவை, எப்படிப்பட்டவை என்பதை நான் அறியவில்லை — கண்திறக்கப்பட்டுவிட்டது, இப்போது, தெரிகிறது, தளைகள் மிகமிகப் பலமானவை என்று — எப்படி, இவைகளை நொருக்கமுடியும்? உன்னிடமோ சம்மட்டி இல்லை! கரத்தாலேயே நொருக்குகிறாய், அதனால் வேதனைக்கு ஆளாகிறாய் பாபம்! உன்னால் முடியாத காரியம்! முயற்சியை விட்டுவிடு! ஏதோ கண்திறந்திருப்பது போதும், வானத்தைக்காண்கிறேன், விண்ணிலே பறக்கும் பட்சிகளைப் பார்க்கிறேன்—அலையைக் காண்கிறேன்—மகிழ்கிறேன் —இது போதும். இந்தத்தளைகள் உன் தாக்குதலால் அறுபடாது" என்று கூறினான்.

"ஆமாம்—ஆமாம்— பலமான தளைகள்" என்றார் அவர்.

"பலமான தளைகள் மட்டுமல்ல—இன்று நேற்று, ஈராண்டுபத்தாண்டு

களுக்கு முன்பு பூட்டப்பட்ட தளைகளல்ல, பலப்பலகாலமாக இருந்துவரும் தளைகள்" என்று, பிணைக்கப்பட்டிருந்தவன் கூறினான்.

அவர் புன்னகையுடன் சொன்னார், "இப்போதுதான் என் நம்பிக்கை அதிகமாகிறது. பன்னெடுங்காலத்துக்கு முன்பு பூட்டப்பட்டவைகள் இந்தத் தளைகள்! நீ தளைகளின் பெருமை இது என்கிறாய். பைத்தியக்காரா! சரியாக யோசித்துப் பார், இது பெருமைக்குரியதல்ல! தளைகள் மிகமிகப்பழையன—எனவே வலிவற்றன! பன்னெடுங்காலமாக உள்ளவை, எனவே காலத்தின் தாக்குதலால், கொஞ்சம் கொஞ்சமாக வலிவை இழந்துள்ளன. எனவே இவை, அறுபட முடியாதன அல்ல, ஆற்றலுடன் நம்பிக்கையும் கொண்டு முயன்றால், தளைகளைப் பொடிபடச் செய்ய முடியும்" என்று உறுதியுடன் உரைத்தார். எங்கிருந்தோ யாரோ, கேலிக் குரலில் சிரித்த சத்தம் கேட்டது, அதனைப் பொருட்படுத்தாது, தளையை நொருக்கும் பணியினைத்தொடர்ந்து நடத்தலானார்—சலிக்காது—வெற்றியுடன்—முப்பதாண்டுகளாக—கேலிச் சிரிப்பொலியை அடக்கும் அளவுக்குவலுவடைகிறது, தளைகள் அறுபடும் சத்தம்!! நம்பிக்கை பலமாகிறது! மங்கிக் கிடந்த கண்களிலிருந்து, புத்தொளி கிளம்புகிறது!

இந்த அரும்பணியினை, ஆற்றலுடன் செய்துவரும், பெரியாருக்கு, விழிப்புற்று, நம்பிக்கையும் பெற்றுள்ள திராவிடம் தரும் அன்புக் காணிக்கைதான், சென்ற கிழமை தூத்துக்குடியில் நடைபெற்ற, திராவிடர் கழக மாகாண மாநாடு!

ஆடவரும் பெண்டிரும், கிழவரும் குழந்தைகளும், இலட்சம் பேருக்கு மேல், திராவிடத்தின் தென் முனையிலே, கூடினர்—விழாக் கொண்டாடினர்.

மந்திரிகளையும் ராஜதந்திரிகளையும் கொண்ட கட்சியினர், ஆள்தேடும் படலத்துக்கு வந்துள்ள நேரத்தில் இங்கு, ஆட்சிப் பீடத்தை நோக்கும் எண்ணமும் இல்லை, என்பதைத் தெள்ளத் தெளிய எடுத்துக் கூறிடும், திராவிடர் கழகத்துக்கு, ஒரு இலட்சம் மக்கள் கூடுகின்றனர்!—வெளிநாடு சென்று, நெடுநாட்களுக்குப் பிறகு வீடு திரும்பும் மகன், வீட்டிற்குள் நுழையும் போது, பெறும், உணர்ச்சி போன்றதோர் உள்ளக் கிளர்ச்சி பெறுகின்றனர்—தேடித் தேடிப் பிறகு கண்டெடுத்த கருவூலத்தைக் கண்டு களிப்பது போல் களிப்புறுகின்றனர். ஓர் வகைப் பாசம்—பற்று, அவர்களைப் பிணைக்கிறது—நடமாட வைக்கிறது.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்,
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்

என்ற கவிதை, காட்சியாகி, எழுச்சி நடமாடுகிறது, எண்ணத்திலே புதிய முறுக்கு ஏற்படுகிறது! எப்படியும் தன் இலட்சியம் ஈடேறும், என்ற நம்பிக்கை ஊனில் உயிரில் கலந்து, அவர்களைப் புது மனிதராக்குகிறது. இது நடைபெறும் அது நடைபெறும் என்று எதிர்பார்த்து, அவை நடைபெறாது போயினும் கூட, சஞ்சலத்துக்கு இடம் இருப்பதில்லை, சந்தோஷம் பிறக்கிறது!

புல்லேந்தும் கையால் வாள் ஏந்துவோம் என்று பிதற்றிடும் பேதைகள், இந்த 'நிலைமை' எதன் அறிகுறி, எத்தகைய சின்னம், இது காட்டும் பாடம் என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆணவத்தால் சிறுமதிகொண்ட, புல்லேந்திகள் இதனை உணராதிருக்கிறார்கள் — அவர்களை யோசிக்கச் சொல்கிறோம் — இந்த ஆர்வத்துக்குப் பொருள் என்ன? ஒரு இனம் விழிப்படைந்துவிட்டது, என்பதாகும்! புலி விழித்துக்கொண்டது என்பதாகும்! இந்நிலையில் புல்லேந்தும் கையிலே வாளேந்திக் காணப்போவதென்ன?

காலப்போக்கை, ஒரு இனமக்களின் கருத்திலே விளைந்துள்ள புதுமையை, விளக்கமாக்கிடும் வகையில் நடைபெற்ற மாபெரும் மாநாட்டினின்றும் கூட, அவர்கள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அவர்கள் ஏதோ மகாபுத்திசாலிகள், என்று கூறப்படும் பேச்சும் கூட, அபத்தம் என்றே கூறுவோம். மிக மிக மட்டரகமான மனப்பான்மையும், மிக மிகக் குறைந்த தரமான புத்தியும் இருக்கும் காரணத்தாலேதான், புல்லேந்தும் கரத்தால் வாளேந்துவோம் என்று கூறத்துணிவு பிறந்தது—இந்தத் "துணிவு"—அறியாமையும் ஆணவமும் கலந்த இந்த மனப்போக்கு, எவ்வளவு கேலிக்குரியது என்பதை விளக்கும் எழில்மிகு சித்திரம், தூத்துக்குடி மாநாடு.

எனவே, மாநாட்டுச் சிறப்பு, கழகத்தவருக்கு மகிழ்ச்சிதருவது மட்டுமல்ல, தங்கள் மமதைக்கு நாடு இனியும் இடமளிக்கும் என்று எண்ணும் மந்தமதியினருக்கு, ஓர் அபாய அறிவிப்பாகும். அன்று அங்குகூடிய மாபெருங் கூட்டம், வழக்கமாகக் கட்சிகள் எத்தகைய 'ஆசா பாசங்களில்' சிக்கிக் கொள்வது வாடிக்கையோ, அவ்விதமான 'ஆசாபாசங்களை' அதாவது, அரசியல் சூதாட்டம், பதவி பிடித்தல் எனும் தன்மைகளை, விட்டொழித்த கூட்டம், என்பதை, உணர்ந்தால்தான், வளர்ந்துள்ள சக்தி எத்தகையது, அதன் விளைவு யாதாக இருக்கும் என்பது, புரியும். முப்புரியினர், வேதத்தின் உட்பொருளை எல்லாம் உணர்ந்தவர்கள், என்று பெருமை பேசுகின்றனர் — ஆனால், அவர்களுக்கு, இந்த உண்மை மட்டும் இன்னமும் புரிந்ததாகத் தெரியவில்லை. புரிந்திருக்குமானால், பாரததேவி, 11ந் தேதி இதழில், பழைய பித்தத்தைக் கக்கியிருக்காது—மற்றோர் முப்புரி, புல்லேந்தும் கையால் வாளேந்துவோம் என்று பிதற்றியிருக்காது. நாடு, இன்றுள்ள நிலையை அவர்கள் இன்னமும் புரிந்து கொள்ளாததாலேயே, இந்தப்பித்தம் அவர்களுக்குக் குறையவில்லை. தூத்துக்குடி மாநாடாவது அவர்களுக்குத் தெளிவை உண்டாக்கட்டும்.

ஆசாபாசங்களுக்குக் கட்டுப்பட்டுவிட்டால், அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டுவிட்டால், வளர்ந்துவரும் சக்தி சிதறும், சிதையும், என்ற சித்தாந்தம் சேலம் மாநாட்டிலே, நாம் பெற்ற பெரும் பாடம். கழகம் இனியும் அதே போக்கிலேதான் செல்லும், என்பதைத் தலைவர் தெளிவாக்கிவிட்டார்—எனவேபச்சைப் பசேலெனக் கழகம் இருப்பதுகண்டு, பறந்து வந்து தங்கும் அரசியல் பட்டுப் பூச்சிகளுக்கும், வெட்டுக்கிளிகளுக்கும் கழகம் பலியிடப்படமாட்டாது என்பது தெளிவாகிவிட்டது.

ஆசாபாசத்தை அறுத்துவிட்டு, ஆர்வத்தை அதிகப்படுத்திக் கொண்டு, கூட்டத்திலே ஆள் சேருவது ஏது என்ற நிலையிலிருந்துவிடுபட்டு, கூட்டம் ஒருஇலட்சம் இருக்கும் இரண்டு இலட்சம் இருக்கும்

என்று மகிழ்ச்சியுடன் மதிப்பிடும் அளவுக்கு நிலைமை முன்னேறி, இதெல்லாம் தேர்தலுக்காக, பதவிக்காக, பட்டத்துக்காக, காண்டிராக்டுக்காக என்ற பழிச்சொல்லிலிருந்து விடுபட்டு, இதுசமுதாயத்தை புது உருவாக்க, அறிவுத் துறையிலே புரட்சியை உண்டாக்க, என்று கூறத்தக்க முறைக்கு முன்னேறியுள்ள, இந்த மாபெரும் சக்தியை உதாசீனப்படுத்துபவர், உலுத்தராக இருக்க முடியுமே தவிர, உள்ளத்தின் போக்கை யூகித்துரைகக்கூடியவர்களாக இருக்கமுடியாது. "ஆகட்டும் அடுத்த தேர்தலிலே, அரை கோடி ஒரு கோடி செலவிட்டாவது இதுகளைத் தொலைத்துவிடுகிறேன்" என்று கூறவும், முடியாது. "பதவி பிடிக்கும் சுயநலமிகள் இவர்கள், பாரீர், இன்னின்னார் இன்னின்ன பதவிக்குப் பல்லிளிக்கிறார்கள்" என்று வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டி, 'இதுகளை வெளியே தலை காட்டமுடியாதபடி செய்து விடுகிறோம்' என்று வீம்பு பேசவும் இடமில்லை.

"உரத்த குரலிலே கூவிடுவோருக்கு உயர்ந்த பதவி கொடுத்துவிட்டு, செல்லப்பிள்ளையாக்கிக்கொள்வோம்" என்ற தந்திரம் புரியவும் இடமில்லை. ஏனெனில், திராவிடர் கழகம், இத்தகைய ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டது — சேலத்தில் புடம் போட்டதங்கம், மாற்றுக் குறையாததாகிவிட்டது. இந்த மகத்தான உண்மையை, "முகத்தி அழித்த" முத்தன்னாக் கூட்டம், சற்று, உணரவேண்டும்.

"இருக்கட்டும் இருக்கட்டும், இதுகளின் மீது காங்கிரசை மோதவிட்டு, இருமண்டைகளிலிருந்தும் குருதி கொட்டக் கண்டு மகிழ்வோம்" என்ற நயவஞ்சக நினைப்புக்கும், இடமளிக்கவில்லை, கழகம். ஏனெனில், காங்கிரஸ் கட்சியுடன், தேர்தலிலோ, பதவிகளிலோ, போட்டியிடும், எண்ணத்தையும் அறவே நீக்கிவிட்ட நிலைபெற்றுவிட்டது.

எனவேதான், 'ஆசாபாசம்' அறுபட்ட நிலையை, நாம், மிக மிக ஜீவசக்தி தருவது என்று கூறுகிறோம்.

கழகத்தின் நோக்கமிருக்கட்டும், நிலையிருக்கட்டும், கழகத்துக்குள்ளே பிளவும் பேதமும், அதிகமாகி வருகிறதாமே—என்று பேசுவதன்மூலம் திருப்தியைத் தருவித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தையும் விட்டுவிட வேண்டும், முன்பு புல்லேந்தி, இனி வில்லேந்தலாம் என்று எண்ணும் கூட்டத்தினர். பேதம் உண்டு. ஆனால், அந்தப் பேதம், பேதப்பட்டுள்ள இரு பிரிவினரும், இடையே உள்ளவர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கவும், தன்மையை உணர்ந்துகொள்ளவும், வசதிதருமே ஒழிய, எதிரிக்கு இடந்தருவதற்கு எள்ளளவும் உபயோகப்படாது. சிற்சில சந்தர்ப்பங்களைச் சிலர், எப்படி எப்படி உபயோகிததுக் கொள்வார்கள், என்பதைக் கண்டறியும், ஒரு போட்டிப்பந்தயம் போன்றதே, பேதம். இது, எந்த வகையிலும், மாற்றார்க்கு இடந்தரும் மனநிலையை ஏற்படுத்தாது.

எனவே, தூத்துக்குடி மாநாடு, தரும் பாடம், என்ன என்பதை நாட்டிலே நாலு ஜாதி வகுத்தவர்களும், நாடாள்வோரும், உணர வேண்டும். அங்கு கூடிய மக்களின் உள்ளத்திலே இருந்த தெல்லாம்,

ஜாதி பேதமற்ற
பொருளாதார பேதமற்ற
அறிவுத் தெளிவு பெற்ற
அன்னியரின் சுறண்டலுக்கு
ஆளாகாத ஓர் இனம்,
அதன் உரிமையுள்ள
ஆட்சியை அமைத்துக்கொண்டு,
உலக மன்றத்திலே வீற்றிருக்க
வேண்டும்

என்பதுதான். இந்த மூலக்கருத்தை இனி முறியடிக்க முடியாது-இதன் வளர்ச்சியைத் தடுக்கவும் முடியாது. இக்கருத்து, கழகக் கோட்டத்தோடும் நின்றுவிடவில்லை—கதர்ச்சட்டையைத் துளைத்துக்கொண்டு, காங்கிரஸ் நண்பர்களின் உள்ளங்களிலே இடம்பெற்று வருகிறது. நாட்டிலே நல்லறிவாளர் பேசும் பேச்சிலே, இந்தக் கருத்து வெளிவருகிறது. புதிய கவிதைகள், புதிய நாடகங்கள், புதிய சினிமாக்கள், எதிலும் இந்த மூலக்கருத்து தெளிவாகத் தெரியஆரம்பித்துவிட்டது. எனவே இந்தக் கருத்தைக் குலைத்துவிட முடியும் என்ற கனவு காணும் நிலையை விட்டு விட்டு, காலத்தின் தாக்குதல் பலமாக விழா முன்பே, கருத்திலே தெளிவைக் கொண்டு, நீதியை நிலைநாட்ட முற்பட வேண்டுகிறோம். கரங்களிலேயும் கருத்திலேயும் இரும்புச் சங்கிலி போட்டு விட்டிருக்கிறோமே, எங்ஙனம் அந்த அடிமை விடுபட முடியும், என்று எண்ணியவர்கள் கண்முன்பு, இன்று, அறுபட்ட தளைகளை, கழற்றி வீசிடாமலும் கூட, திராவிடன் ஏறு நடை நடந்து வந்து, எதிரே நின்று,

இது என் நாடு!
இயற்கை, இதைப் பொன்
னாடு ஆக்கும்.
இங்கு ஜாதி கூடாது!
மதத்தின் கொடுமை கூடாது!
பொருளாதார பேதம் கூடாது!
வடநாட்டுச் சுறண்டல்
கூடாது!
உரிமை வேண்டும்!
புது வாழ்வு வேண்டும்!

என்று கூறுகிறான்.

காற்றையும், கடலலையையும் கேட்டுக் கலங்கிய திராவிடனின் செவியிலே, ஒரு இலட்சம் மக்களின், உணர்ச்சியும், சூளுரையும் வீழ்ந்தது! அவன் வெற்றிப் பாதையில் நடக்கிறான் — அந்தப் பயணத்தைத் தடுக்க முடியாது—வெற்றியைக் கெடுக்க இயலாது— அவன் விழிப்புற்றான், எழுச்சியுற்றான், கூட்டினை விட்டுக் கிளம்பிய சிங்கமெனக் காணப்படுகிறான். முப்புரியினருக்கு 'ஞானக் கண்' உண்டென்று வீம்பு பேசுவர், அந்த ஞானக்கண் கொண்டு கூட அல்ல, சாதாரண ஊனக் கண்ணும், சராசரி மூளை பலமும் கொண்டு கண்டாலே போதும், மறைக்க முடியாத உண்மையைக் காணலாம்!

*

## பக்தனும் வெறுக்கும்

7-ம் பக்கத் தொடர்ச்சி

வெல்லுவது தமிழர் முறையன்று என்பது வரகுண பாண்டியனுக்கு நன்கு தெரிந்ததால் தான், சொக்கநாதர் ஏமநாதனை வென்றதாகச் சொல்லப்படும் சூழ்ச்சியும்போலியும் நிறைந்த திருவிளையாடலை மன்னன் நம்பவோ ஒப்புக்கொள்ளவோ மறுத்தான். அதனாலேயே பாணபத்திரருக்கு உணவும் உறையுளும் கொடுக்காமல் விரட்டி அடித்தான். இல்லையேல், சொக்கநாதரின் திருவருளைப் பெற்ற பாணரைப் பாண்டியன் வெறுக்கக் காரணம் என்ன? பாண்டியன் சொக்கநாதரிடத்தில் அன்பில்லாதவனுமன்று. அவனுடைய சிவ அன்பு, பாணருடைய சிவ அன்பைவிடப் பன்மடங்கு மிகுதியானதென்று கூடச் சொல்லலாம்.

(தொடரும்)

## முயற்சி திருவினையாக்கும்

6-ம் பக்கத் தொடர்ச்சி

வு பின் தங்கார். அங்கு 673 நாடகக் கொட்டகைகளும் 27,863 சினிமாக்களும், 12,924 கலை நிலையங்களும், கிளப்புகளும், 45,858 வாசக சாலைகளும் நூல் நிலையங்களும், 768 பொருட்காட்சிச் சாலைகளும் இருக்கின்றன. இவைகளால் அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் அமோகமான வசதிகள் இருப்பது வெளிப்படை! மாஸ்கோவில் உள்ள பெயர்போன இளைப்பாறும் பூந்தோட்டத்தைப்போல் ஒவ்வொரு பட்டணத்திலும் இருக்கின்றன. அவைகளில் யாருக்கும் யாதொரு விதமான தடையுங் கிடையாது. எல்லாத் தொழிற்சாலைக் கிளப்புகளுக்கும் அருகில் விளையாட்டு மைதானங்களிருக்கின்றன. தொழிலாளர் எல்லோருக்கும் இத்தகைய ஆரோக்கிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் உற்சாகத்துடன் வேலை செய்யும் சோவியத் தொழிற் சங்கங்கள் அதற்கு வேண்டிய உபகரணங்களைத் தருகின்றன. மாஸ்கோவில் 11 ரெயில்வே மார்க்கங்கள் முடிவடையும் ஸ்டேஷன்களிருக்கின்றன. ஒவ்வொரு விடுமுறை தினத்திலும் இவைகளில் பற்பல இடங்களைப் பார்க்கப்போகும் பிரயாணிகள் குழுமியிருப்பதைக்காணலாம். ஏறக்குறைய எல்லாத்தொழிற் சாலைகளிலும ஒருநாள் இளைப்பாறுவதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான மின்சாரவண்டிகள் வாலிபர்கள் இளைப்பாறவும் உல்லாசமாகக் காலங்கழிக்கவும் மாஸ்கோவிற்கு வெளியிலிருக்கும் இடங்களுக்குக் கொண்டுபோய் விடுகின்றன: அங்கு அவர்களுக்கு இலவசமாக உணவு கொடுக்கப்படுகிறது. பணச் செலவில்லாமல் எல்லாவித விளையாட்டும் உல்லாசமும் அனுபவிக்கலாம், அவையாவன; நீந்துதல், படகோட்டல், வாலிபால், டென்னிஸ், பில்லியர்ட்ஸ், முதலிய மற்ற விளையாட்டுகள், இதை ஐ. சோ. சோ. ரஷ்யாவில் உள்ளவர்கள் எல்லோரும் அனுபவிக்கிறார்கள். இவ்விளையாட்டு இடங்களில் ஏராளமானவர்கள் சேர்ந்திருப்பார்கள். இவர்கள் பார்த்து ஆனந்திப்பவர்கள் அல்ல. ஆனால் மேற்படி விளையாட்டுகளில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொள்கிறவர்களாவர். அநேகர் ஆகாயத்தில் பறக்கும் பெலூன்களிலிருந்து குடையைப்போன்றதொன்றைக் கையில் பிடித்துக்கொண்டு குதிப்பதுண்டு. 1934—35-ல் 21000 இளைஞர்கள் விமானங்களிலிருந்தும் 1,200,000 பேர் பாராசூட் கோபுரங்களிலிருந்தும் குதித்திருக்கிறார்கள். வாலிபத் தொழிலாளர்களின் பூரண ஆதிக்கத்தில் 140 விமானிகளின் கிளப்புகளும், பாராசூட் குதித்தலைக் கற்றுக் கொடுக்கும்படியான மூன்று பள்ளிக்கூடங்களும், 150 குதிக்கும் ஸ்டேஷன்களும், 400 பாராசூட் கோபுரங்களுமிருக்கின்றன. 17231 கிளைடிங் நிலயங்களில் 30,000 வாலிபர்கள் கிளைடிங் பழகிக்கொள்ளுகிறார்கள்.

தற்கால சோவியத் இளைஞர்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது விமானப்போட்டிகள். விமானங்கள் மாதிரி ரூபங்களைச் செய்வது இளைஞர்களுக்கும் பிள்ளைகளுக்கும் மிகவும் ஆனந்தத்தைக் கொடுக்கும் வேலையாயிருக்கிறது. கமூணுக்களைச் செய்யும் ஆறு லக்ஷம் பேர்கள் விமானம், மோட்டார் இவைகளின் அறிவு வளர்ச்சிச் சபைகளிலும் ரசாயன பரிசோதனை சாலைகளிலும் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். உலக ரிக்கார்ட்டுகளைச் சோவியத் கிளைடர்கள் அடைந்திருக்கிறார்கள். இவைகளில் அனேகம் விமானம் செய்வதிலாகும்.

சோவியத் யூனியன் கிராமங்களில் கால் பந்து, டென்னிஸ் இன்னும்மற்றப்போட்டிவிளையாட்டுக்கள் ஆடப்படுகின்றன. எல்லாக் கூட்டுப் பண்ணைகளிலும் அவை அமைக்கப்பட்டிருக்கின்றன. 'லெனின்பாத்' என்னும் கூட்டுப் பண்ணையை இங்கு ஒரு தகுந்தஉதாரணமாகக் கூறலாம். இதில் புட்பால் டீம் இருப்பதோடு சில தேர்ந்த படகோட்டிகளும் வாலிபால்விளையாடுபவரும், தேகப்பயிற்சியினரும், நீந்துபவரும், துப்பாக்கிக் குறிப்பில் தேர்ச்சியடைந்தவரும் இருக்கிறார்கள். அதற்குச் சொந்தமான விஸ்தீரணமாயும் ஒழுங்காயும் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானங்களும், துப்பாக்கி சுடுவதைப் பழகிக்கொள்ளு மிடங்களும் படகோட்டு மிடங்களும் தேகப்பயிற்சிச் சாலைகளும் இருக்கின்றன.

தொழில் அபிவிருத்தியடைந்த பட்டணங்களில் தொண்ணூறு லக்ஷம் பேர் தேகப்பயிற்சி யடைந்தவர்கள் இருக்கிறார்கள். அங்கு 4,550 விளையாட்டு மைதானங்களும் 800 ஸ்கையிங் ஸ்டேஷன்களும், 300 தேகப்பயிற்சி சாலைகளும் 2,300 தேகாப்பியாசம் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன.

மலைகள் மீது ஏறுதல், வேட்டையாடுதல், மீன் பிடித்தல், மாரிகால விளையாட்டுகள் இவைகளை மற்றத் தேசங்களிருப்பதுபோல் ஒரு சில பணக்காரர் மாத்திரமல்லாமல் எல்லா ஜனங்களும் அனுபவிக்கிறார்கள்.

சோவியத் இளைஞர்கள் மற்றத் தேசத்திய வாலிப ஜனங்களின் வாழ்க்கையிலும் உலகத்தில் நேரும் ஒவ்வொரு முக்கிய சம்பவத்திலும் மிகவும் கவனத்தை செலுத்துகிறார்கள். உற்பத்தி வேலைகளிலும், தேகப்பயிற்சியிலும், விளையாட்டிலும் எல்லா ரிகார்டுகளையும் தோற்கடிக்க அவர்கள் முயல்கிறார்கள்.

அவர்கள் செஞ்சேனையோடு சேர்ந்த ஒரு பாகமாவார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றாக வசிக்கிறார்கள்; வேலை செய்கிறார்கள்; விளையாடுகிறார்கள். ஐரோப்பாவில் மூன்றில் ஒருபங்கிலும், ஆசியாவில் 2-ல் ஒரு பங்கிலும் பரவியிருக்கும் தொழிற் சாலைகளிலும், சேனையிலும், கப்பற் படையிலும், கூட்டுப்பண்ணைகளிலும் வேலை செய்யும் அநேகமாக ஜனங்களைச் சேர்ந்த இளைஞர்களும் மற்ற எல்லாத் தேசங்களிலுள்ள வாலிபத் தொழிலாளரின் கஷ்டங்களைக் கவனிக்கிறார்கள். பாசிஸ்ட் தேசத்திலுள்ள இளைஞர்களின் கஷ்டங்களைப் பார்த்து மிகவும் வருத்தமும் துக்கமும் அடைகிறார்கள். ஏனெனில் 'ஏகாதிபத்தியத்தின் அநியாயம் இவர்களைச் சண்டை செய்யும் யந்திரங்களாகச் செய்கின்றது. அவர்கள் எல்லோரும் சமாதானத்தை விரும்பியும், நேசித்தும்அதற்காகப் பாடுபடுகிறார்கள்.

கோடானு கோடிகளாகிய இவர்கள், இளமை, மானிட சீர்திருத்தம் இவைகளின் தீபத்தைத் கையில் ஏந்திக்கொண்டு முன்னேறிக்கொண்டே போகிறார்கள். ஸ்டாலின் அரசியல் அவர்களுடைய எதிர்கால முன்னேற்றத்தையும், சுதந்திரத்தையும், வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

*

## என் வாழ்வு

2-ம் பக்கத் தொடர்ச்சி

அம்புகள் ஏராளமாகச் சேர்ந்தன. எங்கள் ஊரே இரண்டு கட்சியாக மாறி விட்டது. இந்தச் சமயத்தில் தான் ரௌடி ரங்கன் எங்களுக்குப் பழக்கமானது. இளைய பூபதிக்கு அவன் தான் கைத்தடி. அவனிடம் எங்கள்ஊர் போக்கிரிகளுக்குச்சற்றுப் பயந்தான். அவன் அவர்களுக்கு "அண்ணாச்சி". "ஏண்டா பயல்களே! உங்கள் குரு நமது சிஷ்யன் தெரியுமல்லோ உஷாரா பிழையுங்கோ" என்பான், அவர்கள் தலையைச் சொறிந்து கொண்டே, "என்ன அண்ணாச்சி, அந்த ஜெமீன்தாரன் கொடுக்கிற காசுக்காக ஏதோகொஞ்சம் ஜால்சாப்புக்காட்டுகிறோம். வேறென்ன இருக்கு" என்று சமாதானம் சொல்வார்கள். ரங்கனுக்கு அந்தப் போக்கிரி உலகத்திலே இருந்த மதிப்புக்குக் காரணம் அவன் இரண்டு மூன்று தடவை அடிதடி, கொலைகுத்துக் கேசில்சிக்கி ஜெயில் போய்த் திரும்பியதுதான். ஒவ்வொரு நாளைக்கு ரங்கனே சொல்வான், "படவாப் பயல்கள் எவனாவது வாலை நீட்டினா, ஆறு அங்குல பிச்சுவா இருக்குது, ஆறு மாசம் ஜெயிலு இருக்குது. ராணியம்மா சத்திரத்திலே மயிர் வளர்த்தா மொட்டை, மணி அடிச்சா சோறு" என்று.

இளையபூபதிக்குப் பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டதும் அவர் எங்கள் ஊரிலேயே வீடுகளும் நிலங்களும் வாங்கிக் கொண்டார். எங்கள் ஊர் வாசியாகி விட்டார். எங்கள் குடும்பம் மறுபடியும் பிரகாசிக்க ஆரம்பித்தது. ஆனால் ஜெமீன்தாரர்களின் சண்டை ஓயவில்லை. இதனால் பூபதியின் செல்வம் கரைந்து கொண்டே வந்தது. இரண்டு பேருக்கும் எதிலும் போட்டி ஏற்பட்டு விட்டது. கோயிலில் அவர் ஒரு நாள் ஆயிரம் ரூபாய் செலவில் செய்வார். மறுதினம் இளைய பூபதியின் கைங்கரியம் ஆயிரத்து ஐந்நூற்றில் நடக்கும். அவர் சங்கீத கச்சேரி வைத்தால் இவர் கச்சேரி வைப்பார். அவர் ஒரு வீட்டை விலைக்கு வாங்கப் பேரம் பேசினால் இவர் அதற்கு அதிக விலை கொடுப்பதாகப்போட்டி போடுவார். அவருடைய மோட்டார் 6000த்தில் என்றால் இவருக்கு 8000. இப்படிப்போட்டி நடந்ததில் பூபதியின் பணம் மிக விரைவிலே குறைய ஆரம்பித்தது. பூபதிக்கு இந்த ரோஷத்தை நான்தான் ஊட்டினேன். ஆனால் எனக்கே அதன் வேகமும் விளைவும் பிடிக்கவில்லை. தீபம் அதிகமாக எரிகிறதே, எண்ணெயே தீர்ந்துவிட்டால் பிறகு இருள்தானே சூழும் என்றபயம் ஏற்பட்டது. நான் அவரது ரோஷ உணர்ச்சியை மட்டுப்படுத்தச்சொன்னேன். அது அவரது ரோஷத்தை அதிகரிக்கவே செய்தது. துள்ளுகிற காளையைப்பிடிக்கப்போனால்கைக்குச் சிக்குகிறதா? அதுபோலாகிவிட்டார் இளைய பூபதி. "அவன் கிடக்கிறான் பஞ்சைப்பயல்!" என்பார். நான் இருக்கும்வரை அவன் தலைநீட்ட முடியுமா என்பார். சதா சர்வகாலமும் இந்தப் பேச்சுத்தான் இருக்கும். அவரிடம் பணம் பிடுங்கவரும் ஒவ்வொருவரும் இந்த உணர்ச்சியைக் கிளப்பியே பணம் பறிப்பார்கள். இளைய பூபதிக்கு இவ்விதமான செலவுகள் பெருகிவிடவே, எங்கள் வீட்டுக்குச் செய்த செலவு தானாகச் சுருங்க ஆரம்பித்துவிட்டது. அது பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. வண்டி அதிகமாக ஓடுகிறதே குடை கவிழ்ந்தால் என்ன செய்வது என்ற பயந்தான் எனக்கு. இளைய பூபதி செய்துவந்த காரியங்கள் எவ்வளவு துவேஷத்தைக் கிளப்பிற்று என்பதற்கு ஒரு உதாரணம் கேளுங்கள். இவருக்கு எனப்பேசிய பெண்ணுக்கும் வேறொரு கடன்கார ஜெமீன்தாரருக்கும் கலியாணம். கலியாணம் பெண் வீட்டில். இளைய பூபதியின் எதிரில் மிகுந்த ஆர்பாட்டத்துடன் நடத்தினால் தான் பெருமை என்றுபெண்ணின் கலியாணத்துக்கு ஏராளமாகச் செலவுசெய்தார் அந்த ஜெமீன்தார். கும்பகோணம் பாடகராம் ஒருவர், 500 ரூபாய் செலவில் அவரது கச்சேரி ஏற்பாடாகி இருந்தது.

அன்று கலியாணப் பந்தலிலே எள் போட்டால் எள் எடுக்கமுடியாது; அவ்வளவு கூட்டம், மோட்டார் மேல் மோட்டார், பறந்து கொண்டிருந்தன. ஊரெங்கும் கச்சேரியின் பெருமை பற்றித்தான் பேச்சு. இளைய பூபதிமட்டும், "கச்சேரியின் இலட்சணம் தெரியத்தானே போகிறது, பார்க்கத்தானே போகிறார்கள் காறி உமிழத்தானே போகிறார்கள்" என்று கூறிக்கொண்டிருந்தார். மாலை 6-மணிக்கு கச்சேரி ஆரம்பமாக வேண்டியது. 7-மணி ஆயிற்று, 8 ஆயிற்று பாடகர் வரவே இல்லை. ரயிலுக்குச்சென்றிருந்த ஆள் பாடகர் வரவில்லை என்ற சேதியைத்தான் சொன்னான். ஜெமீந்தார் அண்டம் வரை எகிறினாராம் ஆத்திரத்துடன். கைகளைப் பிசைந்து கொண்டாராம். "மோசம் போனேனே. முகத்தில் அந்தப் பார்ப்பான் கரியைப் பூசிவிட்டானே. எல்லாம் இந்தப் போக்கிரி பூபதியின் வேலை" என்று கர்ஜித்தாராம். வந்தஜனங்களுக்குச்சமாதானங்கூறிவிட்டு,உள்ளூர் வித்வானைப் பாடச்சொன்னாராம். தான் இருக்கும்போது வெளியூர் பாடகர்களை வரவழைக்கலாமா என்ற துக்கத்தைக் காட்ட, அவர் அழுது தீர்த்தாராம் கொஞ்சநேரம். சங்கீதக் கச்சேரியின் அழகு அப்படி இருந்ததாம். ஜனங்கள் கேலி செய்துவிட்டார்கள். ஜமீன்தாரர் அவமானம் தாங்கமாட்டாது தலையைத் தொங்கவிட்டுக்கொண்டாராம். எங்கள்வீட்டிலே இளைய பூபதி இடி இடி எனச் சிரித்துக்கொண்டே, 'எப்படிப்பூபதியின் வேடிக்கை! இவன் பாடுவதற்கு அந்தப் பார்ப்பானுக்கு 500 ரூபாய் தருவதாகப் பேசி அட்வான்ஸ் கொடுத்தான். நான் அந்தப்பாடகன் இங்கே வந்து பாடாதிருக்க 1000 ரூபாய்முழுவதுமே நேற்றுக்கொடுது ரங்கனை அனுப்பினேன். இங்கே கச்சேரி கிச்சேரி ஆகிவிட்டது என்று கூறிச் சிரித்தார். இப்படியே ஒவ்வொரு காரியத்திலும் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்து வந்தனர். இரண்டு சிங்கங்கள் சண்டை இடுவதைப் பார்க்கலாம். ஆனால் இடையிலே நாங்கள் சிக்கிக்கொண்டோமே. எங்கள் சிங்கம் சாய்ந்துவிட்டால் மறுகணம் பழைய சிங்கம் எங்களைப் பட்சணம் செய்துவிடுமே என்ற பயந்தான். பணம் தீர்ந்துவிட்டால் இந்தப் பாணவேடிக்கை ஏது?

(தொடரும்)

## மறைவு

பட்டுக்கோட்டைச் சுயமரியாதைச்சங்க செயலாளரும், திராவிடர் கழக கமிட்டி, அங்கத்தினருமான எஸ். பாப்பையன் அவர்களின் இரண்டாவது சகோதரர் எஸ். மாணிக்கம் மின்சாரத் தாக்குதலால் சென்ற 20—4—48, செவ்வாய்க்கிழமை மாலை 7-மணிக்கு தனது 22-வது வயதில் காலமானார்.

## 18-வது திராவிடர் கழக

4-ம் பக்கத் தொடர்ச்சி

(திராவிட) மக்களுக்கும் மனம்விட்டு, கவலைவிட்டு, பயம்விட்டு, எதிரிகளுடன் பிணங்கிப் போராட்டம் நடத்த வசதியும், துணிவும் ஏற்படுகிறது. நாம் அரசியலில் பிரவேசிக்கிறோம் என்றால் பழையபடி அங்குள்ள நம்மவர்கள் அனுமார், சுக்ரீவன், விபீஷணன்மார்களாகவே ஆகிவிடுவார்கள். நம்நாட்டுப்பாமர மக்கள் இருக்கும் நிலையிலும், ஒவ்வொரு பாகத்தில் ஒவ்வொரு வகுப்பார் அந்தந்தப் பாகத் தலைவர்களுக்கு வகுப்பின் பேரால் அடிமைப் பட்டுக்கிடக்கும் நிலையிலும் நாம் பயன்படத்தக்க அளவுக்காவது கழகத்தின் பேரால் வெற்றி பெறுவோம் என்று கருதுவதற்கில்லை. அப்படி வெற்றி பெற்றாலும் இன்றைய சூழ்நிலை அரசியல் என்பது 'ஜான்சன்' அவர்கள் சொன்னபடி 'முதல்கெட்பர்அயோக்கியத்தனம்' என்பதை ருஜுப்பிக்கும் மாதிரியில் நடந்து தீரவேண்டியதாய் இருப்பதால், இந்த நிலையில் அங்கு செல்பவர்கள், இன்று சென்றிருப்பவர்களைவிட அதிகமான யோக்கியர்களாக இருக்கமுடியும் என்று நம்மால் கருதமுடியவில்லை.

பொதுவாக இன்றைய நிலைமை நாசமும், கட்டுப்பாடு, ஒழுக்கம், நாணயம் ஆகியவை அற்ற தன்மையும் வளர்ச்சி பெற்றுக்கொண்டு போகிற நிலைமையாக இருந்து வருகிறது.

இது மாறவேண்டுமானால் நாம் வெளியில் இருந்து பிரச்சாரம் செய்வதைத்தவிர, இன்றைக்கும், இன்னும் சிறிது நாள்களுக்கும் நமக்கு வேறுவழியில்லை என்றே எனக்குப்படுகிறது. 40. 50, வருடகாலமாகவே மக்களுடன் பழகுகிறேன். உலக அனுபவமும், அரசியல் அனுபவமும் பாமர மக்கள் சுபாவ அனுபவமும், ஒரு அளவுக்குப்பெற்று இருக்கின்றேன். 'தன்னலமற்றதொண்டு தன்பொதுநலத்துக்குப் பயன் கொடுக்கிறது' என்பது எனது அனுபவம். இது தனி மனிதர்களுக்கு மாத்திரமல்ல, கழகங்களுக்கும்கூடத்தான் இம்முறை பயன்படுகிறது

“எங்கள் கழகம், சட்டசபைக்குப்போட்டி போடுவதில்லை. உங்களை நாங்கள் தட்டிக்கேட்பதில்லை” என்று மக்களிடம் கூறி நம் குறைகளைச் சொன்னால் மக்கள் மற்றவர்கள் வார்த்தைகளைவிட நம் வார்த்தைகளுக்குச் சற்று அதிகமாகக் காது கொடுப்பார்கள். மக்கள் மாத்திரம் அல்ல, மந்திரிகளும் சற்றுக் குறைவாக அடக்குமுறையைப் பிரயோகிப்பார்கள்.

“நாங்கள் உங்கள் பதவிக்கு போட்டி போடுவதில்லை. உங்களைக் கவிழ்க்க முயற்சிப்பதில்லை. இன்ன காரியத்தைச் செய்யுங்கள். உங்களை ஆதரிக்கிறோம்” என்றால் மந்திரிகளும் ஏதாவது கூடியதைச் செய்ய ஆரம்பிப்பார்கள்.” அவர்களது உள்துறைப் போட்டிஎதிரிகளிடமும் துணிச்சலாகப் போரிடுவார்கள். பதவிப்போட்டிக்கு நாம் போக ஆரம்பித்தால் பார்ப்பனர்கள் வெளிப்படையாக வெளியில் வந்து எதிர்க்க மாட்டார்கள்; திராவிட மக்களால் தான், அதாவது பதவியில், சுயநலத்தில் பற்றுள்ள திராவிட மக்களால் தான் நமக்குத் தொல்லை அல்லது தடை ஏற்படலாம். அவர்களைத் தாராளமாய் விட்டு விட்டால் அவர்களில் பெரும்பாலோரே பார்ப்பனர்களிடம் போரிட்டுக்கொண்டு, நமது கொள்கைகளையே தங்களது போர் திட்ட ஆயுதங்களாகக் கூடப் பயன்படுத்துவார்கள். அவர்களுக்கும் அது வெற்றிக்கு நல்ல மார்க்கமாக இருக்கும். அப்படி வெற்றிபெற்றால் அது நமக்குப் பயன்படலாம். ஆகையால்தான் திராவிடர்கழகம் யாருடனும் போட்டிக்குப் போகாத ஒரு பிரச்சார ஸ்தாபனமாய் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன் என்பதோடு, அரசாங்கத்தினுடையவும் பார்ப்பனர்களுடையவும் குறைகளையும், குற்றங்களையும், தன்மைகளையும், சூழ்ச்சிகளையும், எல்லாம் வெளியாக்குவதையும், பிரச்சாரம் செய்வதையும் கருத்தாய்க்கொண்ட பிரச்சாரக்கழகமாய் இருக்கவேண்டும் என்கிறேன்.

இவ்விருவர்களுடைய அடக்குமுறைகளுக்கும் தொல்லைக்கும் ஆளாக நேரிட்டால் அதுவும் நம் பிரச்சாரத்துக்கு ஒரு நல்ல பலமும், பயனும், வெற்றிக்கு ஒரு மார்க்கமும் ஆகும். நிலைகுலைந்து இனப்பற்று அற்று, சின்னாபின்னப்பட்டுக் கீழ் நிலையில் இருக்கும் யாதொரு ஆதரவற்ற ஒரு சமுதாயத்திற்குச் சிறிது காலத்திற்காவது இதைவிட; அதாவது மக்களை அதை உணரும்படி செய்வதைவிட வேறு வழியில்லை என்றே கருதுகிறேன். பார்ப்பனியத்தின் பலமும், அதன் விஷத்தன்மையும், அது கடிக்கும் முறையும் நம்மில் அநேகருக்குத் தெரியாது. மற்றும் அரசியலில் நாம் போட்டி போடுவது என்றால், அதன் அர்த்தம் என்ன? பார்ப்பனர்களோடு போட்டி போடுவது என்பதுதானே? நாம் போட்டிபோட ஆரம்பித்தால் நமது இனத்துரோகிகளும் சுயநலக்காரர்களும், பணமூட்டைகளும் சமய சஞ்சீவிகளுமாய் இருப்பவர்கள் பதவிக்கு யாரைத் தஞ்சமடைவார்கள்? பார்ப்பனர்களைத்தானே தஞ்சமடைவார்கள்.

இன்று பாருங்களேன்: நம்மில், நான் மேலே சொன்ன கூட்டத்தைச் சேர்ந்த அத்தனை ஆள்களும் இன்று பார்ப்பன அடிமைகளாகப், பார்ப்பனர்கள் காலடிகளில் இருக்கிறார்களா, இல்லையா?

1000, 2000, வேலி நிலம் கொண்ட மிராசுதார்களும், 8 கோடி 10 கோடி ரூபாய் செல்வம் கொண்டுள்ள பணக்காரனும், உலகம் மதிக்கும் அறிவாளிகளும், மாபெரும் நம் மடாதிபதிகளும் ஒரு பொதுக் காரணமும் இல்லாமல் தன் சுயநலத்துக்கு ஆக மாத்திரமே பார்ப்பனர்களின் காலடியில் கிடக்கின்றார்கள் என்றால், இனி யாரைவிட்டு நாம் போட்டி போடச் செய்யமுடியும்? அவர்களுக்கு வெற்றி ஏற்பட்டால் தான் நம் பயன் என்ன? உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், நம்மால் சிறிதளவாவது மதிப்புப் பெற்றவர்கள் எல்லோருமே இன்று பார்ப்பனர்கள் காலடியில், பார்ப்பனர்களுக்குப் பயந்து சந்து பொந்துகளில் அநாமதேயமாய்க் கிடக்கிறார்கள் என்றால், இனி யாரை நம்ப முடியும்? நம் கழகம் சுயநலவாதிகளுக்கு முன்னேற ஒரு படிக்கட்டாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், நான் அதற்காக வருத்தப்படமாட்டேன். அப்படிப்பட்டவர் நம் கழகத்தில் விளம்பரம் பெற்று, எதிரிக் கும்பலில் சேர்ந்தாலும் அவர்களை நாம் குறை கூறவில்லை என்றால், அவர்களுக்கு நாம் போட்டி இடவில்லை என்றால், அவர்கள் நம்மிடம் படித்ததை அங்கு தாராளமாய் ஒப்புவிக்கவாவது தைரியம் கொள்வார்கள்.

ஆகையாலும், நம் கழகம் இன்றைய நிலைக்கு ஒரு பிரச்சார கழகமாகவே இருக்கவேண்டுமே ஒழிய, தேர்தல் பதவிப்போட்டியோ, அர

சியலைக் கைப்பற்ற வேண்டும் என்கின்ற எண்ணமோகூடாது என்பது எனது தாழ்மையான கருத்து. இந்த நிலையில் நம் கழகம் உண்மையாய் இருக்கும்வரை கெடுதி ஒன்றும் வராது. அதற்கு மாறாய் நம் கழகத்துக்குப் பலம் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கும். நம்மை அறியாமலே நம் கொள்கைக்கு நல்ல வெற்றி கிடைத்துக்கொண்டும் இருக்கும். ஆதலால் நாம் அரசியலைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

நம் கழகம் இன்று சுமார் 50,000 (ஐம்பதினாயிரம்) அங்கத்தினர்களையும், சுமார் 400-க்கு மேற்பட்ட கிளைக்கழகங்களையும், சுமார் 40 ஆயிரம் ரூபாய் போன்ற நிதியையும், ஏராளமான இளைஞர்கள், மாணவர்களையும் கொண்டு இருக்கிறது. இது சேலம், திருச்சி மாநாடுகளில் போட்ட திட்டங்கள் ஒருஅளவுக்கு நிறைவேறி இருப்பதைக் காட்டுவதாகும். மற்றும் நம் கழகக் கொள்கைகளைப்பரப்பவும், கழகத்தை ஆதரிக்கவும், கழகத்துக்கு விரோதமாய் எதிரிகள் கட்டுப்பாடாய் நடத்தும் விஷமப் பிரச்சாரத்தைத் தகர்க்கவும் 'விடுதலை' என்கின்ற ஒரு தினசரிப் பத்திரிகை கழகப்பொருள் உதவி எதுவும்இல்லாமல் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் வெளியிட வேண்டியதான தன்மையில் நடந்து வருகிறது. கழகத்தை, கழகக் கொள்கைகளை ஆதரிக்கும் தன்மையில் 40, 50-க்கு மேற்பட்ட வார, மாத பத்திரிகைகளும் வெற்றியோடு நாட்டில்நிலவுகின்றன. அதே தன்மையில் பல புத்தக வெளியீடுகளும் வெளியாகி வருகின்றன. பல நடிகமணிகள் நம் முக்கிய தொண்டாகிய சமுதாய சீர்திருத்தக்கொள்கைகளையும் கொண்டு நாட்டின் பல பாகங்களில் நாடகம் சினிமாக்களில் நடித்து வருகிறார்கள். இயக்கப் பாடல்களும் எங்கும் சிறு சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை பாடப்பட்டுவருகின்றன. கழக அங்கத்தினர்களாக அத்தனை பேரும் இல்லாவிட்டாலும் பெரும் அளவிற்கு மக்கள் கருப்புச்சட்டை அணிந்துவருகிறார்கள். தமிழ்மாவட்டங்கள் எங்கும் நாள் தவறாமல் பல தோழர்களால் பொதுக் கூட்டங்கள் கூட்டப்பட்டும், கழகக் கொள்கைகள் பிரசாரம் செய்யப்பட்டும் வருகின்றன.

## தொழிலாளர் நிலை.

ஏழை பாட்டாளி மக்கள், தொழிலாளி மக்கள் கூலி போதாதென்று பட்டினிகிடந்து போலீஸ்காரன் குண்டுக்கு இரையாகிப் பொத்பொத்தென்று கீழே விழுந்து உயிர் விடும்போது, அவன் பெண்டு பிள்ளைகள், கஞ்சிக்கு ஆலாய்ப்பறக்கும்போது, பட்டேலுக்கும், நேருவுக்கும், பிரசாத்துக்கும், ஆஜாத்துக்கும், சரோஜனிக்கும் மாதம் 5000, 6000 வீதம் சம்பளமும், அரசபோக மாடமாளிகை, அரண்மனை வாசமும்; நேரு தங்கை விஜயலட்சுமிக்கும், சுற்றத்தாருக்கும் மாதம் 8000 சம்பளமும அரசபோக வாழ்க்கையும், அடிக்கடி ஆகாயக்கப்பல் போக்குவரத்து பிரயாணமும் என்றால், இந்தத் தலைவர்களெல்லாம் மக்கள் பிரதிநிதிகளா? நாட்டுமக்களுக்காகப் பாடுபடும் தியாகிகளா? அல்லது "டார்பிஞ்ஸ்வீப்" என்னும் லாட்டரியில் முதல்பிரைஸ் அடித்த பாக்யசாலி லட்சுமிபுத்திரர்களா? ஏழை பாட்டாளிமக்கள் முதலாளிகளின் கொடுமையால் வேலை விட்டு, வீடுவாசல்விட்டு, நாடு முழுவதும் பிச்சை எடுக்கத் துணிந்து அலையும்போது முதலாளிகள் நிலைமை எப்படி இருக்கிறது? பணத்தைக் குவிக்கிறார்கள், மாடமாளிகைகள் உயர்த்துகிறார்கள், பஞ்சணையில் கொஞ்சி விளையாடுகிறார்கள், மந்திரிகளோடு சல்லாபமாய் உலவுகிறார்கள். முதலாளிகளும் மந்திரிகளும் காதலர் காதலிகளாய் உல்லாசக் கிரீடைகள் நடத்துகிறார்கள். டீ பார்ட்டி, நாட்டியக் கச்சேரி, இசையரங்கு, சாமி தீபாராதனை போல் என்ன வேடிக்கை! எவ்வளவு கேளிக்கையாய் வாழ்கிறார்கள், சுயராஜ்ய நாட்டில்! சமதர்ம வாதி—பொதுஉடைமைவாதி—ஏகாதிபத்ய எதிர்ப்புவாதி என்றெல்லாம் தப்பட்டை அடித்து விளம்பரம் செய்யப்பட்டுப் பேர்பெற்ற பண்டித ஜவஹர்லால் நேருவின் (முதல் மந்திரி) தலைமையில் ஏழைப்பாட்டாளி மக்கள் கதி இதுதானா? நூற்றுக்கணக்கானநாட்களாகக் கோவையில்களில் போராட்டங்கள் நடக்கின்றன. நாட்டில் பல நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டுத்தொழிலாளிகளும் மக்களும் அல்லல்பட்டு மிருக ஜீவன்கள் போல் படாதபாடுகள் படுகின்றனர். இவைகளைஎல்லாம் பார்த்தும், தங்களால் இவைகளை அடக்க முடியாமல்—பரிகாரம் செய்ய முடியாமல்போயும்கூடத், தொழில் ஸ்தாபனங்களையெல்லாம் சர்க்கார் ஏன் ஏற்று நடத்தாமலிருக்கிறார்கள்? இதற்குச் சமாதானம் சர்க்கார் அல்லதுமந்திரிகள், முதலாளிகளின் ஆசைவலையில் சிக்கி அழுந்திவிட்டார்கள் என்பதைத் தவிர, அல்லது இந்த மந்திரிகள் நிலையில்லாதவர்கள் ஆனதால் கிடைத்தவரை சுருட்டுவோம் என்கின்ற வேலை திட்டத்தைக் கையாளுகிறார்கள் என்பதைத்தவிர, வேறு எதைச் சொல்ல முடியும்? என்று கேட்கின்றேன். இந்நாட்டுத் தொழிலாளிகள் இப்படி அல்லல் படுகிறார்கள் என்றால், இந்த ஆட்சி முதலாளிகள் ஆட்சி என்றுதானே ஆகிறது?

## கழகக் கட்டுப்பாடு

இனி, கழககட்டுப்பாடுபற்றிச் சில சொல்ல ஆசைப்படுகிறேன். கழக அங்கத்தினர்களுக்குள் கட்டுப்பாடு இருக்கவேண்டும். கழகத்தில் இருப்பவர்கள், தலைமைக்கு, கழக கட்டு திட்டங்களுக்கு மரியாதை கொடுத்து, பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் அது என்றைக்காவது பலனளித்தே தீரும். நம் சொந்த சௌகரியத்தை உத்தேசித்துத்தலைவருக்கும் கட்டு திட்டங்களுக்கும் மதிப்புக் கொடுக்காமல், நம் செல்வாக்கைக் கொண்டே கழகக் காரியத்தை சாதிக்க முடியாது என்பதோடு, எப்போதாவது அது ஏமாற்றத்தைக் கொடுத்துத்தான் தீரும். அன்றியும் அது எதிர்ப்போக்கில் நீந்தவேண்டிய அளவில் சிரமமும் தொல்லையும் உள்ள காரியமாக வாவது ஆகிவிடும். நம் கழகத்தில் யாருக்கு என்ன பெருமை இருந்தாலும் அடையும் சுயநலப் பயன் ஒன்றும் இல்லை. பொருள் உள்ளவர்களுக்குத்தான் பெருமை இருக்கும். பெருமைக்கு ஏற்ற பொறுப்பும் பாடும் இருக்கும். ஆதலால் பொறாமைக்கு நம் இயக்கத்தில் இடமில்லை. அவசியமில்லை" என்பதாகவும், பிரச்சாரமே நம்முடைய முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டுமென்றும், இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் 3 மணி நேரம் பேசினார்கள்.

(5 பக்கம் பார்க்க)

# இன்று நடப்பதை அன்றே சொன்னார் பெரியார்

—✲✲—

திராவிடர் கழகமும் அதன் கோள்கைகளும் எப்படி இருக்கவேண்டுமென்று தலைவர் பெரியார் அவர்கள் இன்று சோல்லுகிறாரோ, இந்தக் கருத்தையே அன்று, திருவாரூர், சேலம், திருச்சி மாகாண மாநாடுகளிலும் கூறியுள்ளார் என்பதை நமது தோழர்களுக்கு நினைவூட்டும் முறையில், பெரியார் அவர்களின் தலைமையுரைகளில் சில குறிப்புகளை இங்கு தருகிறோம்:—

## 24—8—40-ல்

## திருவாரூர் மாநாட்டில் பெரியார்

"சமுதாய சீர்திருத்த விஷயத்தில் அரசியல் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் இதுவரை நாம் தக்கபலன் அடையவே இல்லை. சமுதாயத்தில் ஏதாவது ஒரு சிறிய முன்னேற்றமாவது பெற்றிருக்கிறோம் என்று சொல்லப்படுமானால், அது பொதுக் கிளர்ச்சியின் பயனாய் நிவர்த்தி இல்லாமல் மேல்ஜாதிக்காரர்கள் இடம் கொடுக்கவேண்டி ஏற்பட்டதென்பதல்லாமல் மற்றப்படி சட்டத்தின் மூலமாய் ஏற்பட்டதென்று சொல்வதற்குத் தகுந்ததான காரியம்ஒன்றுமில்லை.

இந்த நிலைமையிலே நாம் இருந்து வருவோமானால் நமது மனிதத் தன்மையையும் சமுதாய சம உரிமையையும் பெற இனியும் எத்தனை நாள் ஆகும் என்பது உத்தேசமாய் எண்ணுவதற்குக்கூட முடியாததாய் இருக்கிறது.

நாம், சமுதாயத்தில் கல்வி, பொருளாதாரம், சமூக சமத்துவம், முதலிய காரியங்களில் இருந்து வரும் நிலைமை உலகிலேயே வேறெங்குமே இல்லாத தாழ்மையான நிலைமை என்று சொன்னால் தயவு செய்து நீங்கள் நம்பித்தானாகவேண்டும். எனவே இவைகளுக்கு வரப்போகும் சீர்திருத்தத்தில் கண்டிப்பான பரிகாரங்கள் ஏற்பட்டு மக்களில், இயற்கையில் அல்லாமல் செயற்கையில் எவ்வித பேதமும் ஏற்படாமலிருக்கும்படி திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மறுக்கப்படுவதும் மனிதன் பிறவியின் காரணமாக கீழ்மைப்படுத்தப்படுவதும் மனிதன் சமுதாயமுறை காரணமாக எளியவனாகவும் கூலிக்காரனாகவும் அடிமையாகவும் செய்யப்படுவதும் உலகப் போட்டியில் ஒருவன் காலைக்கட்டியும், மற்றொருவன் காலைச் சுதந்திரமாக விட்டும் ஓடச்செய்வது போன்ற காரியமாய் நடப்பதும் என்பது எதை அனுசரித்த ஒழுங்கு என்பது எனக்குப் புரியவில்லை.

பாடுபடுபவன் ஏழையாகவும், கீழ்மகனாகவுமே இருக்கவும், சோம்பேறியும் பேராசைக்காரனும் செல்வவானாகவும் மேன்மகனாகவும் மந்திரியாகவும் ஆட்சி ஆதிக்கக்காரனாகவும் ஆகும்படியாகவும் இருந்துவரும் சீர்திருத்தம் எப்படிப்பட்டதானால்தான் சமுதாயத்துக்கு என்ன பயன்? எல்லா மக்களுக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் இருக்கவேண்டும். பிறவியும் பரம்பரையும் எப்போதும் முன்னணியில் இருக்கும் முறை ஒழிக்கப்படவேண்டும். ஒருவரை ஒருவர் சுரண்ட இடமே இருக்கக் கூடாது. ஏனெனில் நம் நாட்டில் ஏழைகளும் பாட்டாளிகளும் கீழ் மக்கள் எனப்பட்டவர்களும் தான் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்களாய் இருக்கிறார்கள். ஆகையால் இவர்களது நிலை மாற்றமடைந்து முன்னேற்றமடைவதற்கு ஏற்ற திட்டங்கள் அடங்கிய சீர்திருத்தங்கள் தான் வரவேற்கப்படவேண்டும். ஏனெனில் வெறும் அரசியல் அதிகாரங்களோ, ஆதிக்கம் செலுத்தக் கூடிய பதவிகளோ மாத்திரம் கொண்ட சீர்திருத்தங்கள் நாட்டின் —மக்களின் உண்மைக் குறைகளையும் கீழான நிலைமைகளையும் போக்கி விடாததாலால், யாவருக்கும் சமத்துவத்தையும் சமசந்தர்ப்பத்தையும் கட்டாயம் அளித்துத் தீரும்படியான சீர்திருத்தங்களே இனி வரவேற்கப்படத் தக்கவையாகும் என்று சொல்கிறேன்.

அரசியல் உரிமை விஷயத்தில் நாம் எந்தக்கட்சியாரின் கொள்கைக்கும் பிற்பட்ட கொள்கையை உடையவர்கள் அல்ல. நம் நாட்டின் ஆட்சி முறை நம் கையிலேயே இருக்க வேண்டும் என்பதும் நம்நாடு அன்னியரின் எவ்வித ஆதிக்கத்திற்கும் சுரண்டுதலுக்கும் உட்படாத உண்மையான முழுச் சுதந்திர நாடாக இருக்கவேண்டும் என்பதும் நமது அடிப்படையான தத்துவமாகும். அதைச் சரியாக நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஆக நாம் வகுக்கும் திட்டங்கள் நம் நாட்டில் உள்ள ஒரு சில சுயநலக் கூட்டங்களுக்கு அவர்களது பேராசைக்கும், சூழ்ச்சிக்கும் எதிராக இருப்பதால் அவ்வகுப்பாருக்கு பாதகமேற்படுவதையே உத்தேசித்து அவர்கள் நம்மை வகுப்புக் கொள்கைக்காரர்கள் என்று சொல்ல வேண்டியவர்களாகிறார்கள்.

அன்னிய ஆட்சியும் அன்னிய ஆதிக்கமும் ஒழியவேண்டும் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? ஒரு வகுப்பு அல்லது ஒரு வர்க்கம், ஒரு சமயம் அல்லது ஒரு நாட்டைச் சேர்ந்த மக்களை மற்றொரு வர்க்கம், முதலியவற்றைச் சேர்ந்த மக்கள் ஆதிக்கமோ ஆட்சியோ செய்யக் கூடாது என்பதும் சுரண்டக் கூடாது என்பதும்தானே கருத்தாக இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் தூரத்தில் இருக்கும் நாட்டாலும் வர்க்கத்தாலும் மாத்திரம் ஆட்சி செலுத்தக்கூடாது—சுரண்டக்கூடாது. ஆனால் அடுத்த நாட்டுக்காரனும், பக்கத்தில் இருக்கிற அன்னியவர்க்கத்தாலும் ஆதிக்கம் செலுத்துவதையும் சுரண்டுவதையும் மக்களைப் பிரித்து வைத்து சூழ்ச்சி செய்து கலவரம் உண்டாக்கிப் பாடுபடாமல் வாழ்வதையும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றும் மற்றும் இவர்கள் இவைகளை இன்னும் அதிகமாகச் செய்வதற்கு ஏற்றவசதிகளைச் செய்து கொள்வதற்கு இடம் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லத்தக்க காரியங்கள்தான் பூரண சுதந்திரம் என்றால் இதை யார் ஒப்புவார்கள். இது ஒரு கூட்டத்தாருக்குத்தான் தங்கள் காரியங்களுக்கு பூரணசுதந்திரம் என்றாகுமே தவிர ஒருநாட்டுப் பெருங்குடி மக்களுக்கு பூரணசுதந்திரமாக ஆகாது. வெளியார் யாருடைய

சரண்டுதலுக்கும் ஆதிக்கத்திற்கும் நம்நாடு உட்படாமல் இருக்கவேண்டும் என்கிறோம். ஆதலால் நாம்தான் இந்நாட்டினுடையவும் இந்நாட்டு மக்களுடையவும் பூரண சுதந்திரத்துக்கு உண்மையாகப் பாடுபடும் கட்சியாராவோம்."

### 27—8—44-ல்

### சேலம் மாநாட்டில் பெரியார்

"நம்நாட்டின் உண்மையானதேவைகளைக்கட்டுப்பாடாக எடுத்துச் சொல்லவேண்டும், நியாயமான கிளர்ச்சிகளைச் செய்யவேண்டும். அப்போதுதான் சர்க்காரின் கண்கள் திறக்கும். அதைவிட்டுவிட்டு,மானங்கெட்ட பட்டம் பதவிகளுக்கு ஆசைப்பட்டுக்கொண்டு சர்க்கார் காலடியில் ஆயிரத்தெட்டுக் கும்பிடு போட்டுக்கொண்டும், கவர்னர் மாளிகை வாயற்படியில் அவரின் பேட்டிக்காக்காத்துகொண்டுமிருந்துவிட்டு, என்னதான் அமைப்புமுறையுடனிருந்தாலும், அது போலித்தனமானது என்பதேஎனதுகருத்து. சர்க்காரும், மற்றும் இயக்கத்தினரும்கூட அவ்விதமேதான் நம்மைப் பற்றியும்; நமது கட்சியின் அமைப்புமுறையைப்பற்றியும் அலட்சியமாகக்கருதுவர். இன்னும் சிலநாட்களுக்குள் நாம் பெரிய தியாகம் புரியத்தயாராக இருக்கவேண்டுமென்பதையும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்,

ஆகவே தோழர்களே, இனி நாம் நமது கிளர்ச்சியைத் தீவிரமாகஆரம்பிக்கவேண்டும். ஆரியத்திற்குப்புத்தி புகட்டவேண்டும். அதேசமயத்தில் சர்க்காரும் நமது கிளர்ச்சியைக் கண்டு, நம் திராவிடநாட்டின் விடுதலை வேட்கையைப் பூர்த்திசெய்யுமாறு செய்விக்கவேண்டும். நான் இதுவரைகூறியவைகளில் ஏதாவது தீவிரமாக இருப்பினும் அவ்வளவும் நமக்குள்ளிருக்கும் கட்டுப்பாடு வளர்ச்சியடைய வேண்டுமென்பதற்காகத்தானே யன்றி வேறில்லை."

### 29—9—45-ல்

### திருச்சி மாநாட்டில் பெரியார்

"நமக்கு,நம்கொள்கைகளில், லட்சியத்தில் உள்ள அவசியமும், உறுதியும், அதற்கு ஆக எதையும் பலி கொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்கின்ற துணிவும்தான் ஆதாரவும் உதவியும் சாதனமுமாய் இருக்கிறது. நமக்கு எதிர்ப்பு அதிகம். கூடவே இருந்து காரியத்தைக் கெடுக்கும் தந்திரக் கூட்டம் அதிகம். ஏனெனில் மிக்க செல்வாக்கும், பலமான அஸ்திவாரமும், ஏராளமான எதிர்ப்பு அக்கரை (Vested Interests) உள்ள மக்களையும் கொண்டதொரு ஸ்தாபனத்துக்கு, அதன் கருத்துக்கு, நடத்தைக்கு, எதிர்ப்பாக இருக்கிறோம். எதிர் நீச்சலும், செங்குத்தான குன்றின்மேல் பாரமான குண்டை மேலே கொண்டுபோக உருட்டும் வேலையும் போன்ற அபாயகரமான காரியத்திலீடுபட்டு இருக்கிறோம். வாழ்வு அல்லது சாவு என்று அறுதியிடும்படியான கஷ்டத்தில் இருக்கிறோம். நம் பாதையில், பிரயாணத்தில், முழத்துக்கு முழம், அங்குலத்துக்கு அங்குலம் தட்டுத்தடுமாறி விழும்படியான காடு முரடான பாதையில் செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்.

தோழர்களே! நம் சமுதாயத்திலும், சமயத்திலும், நாட்டு உரிமையிலும், நாம் இந்தியர், இந்துக்கள், பாரதியர், பாரதமக்கள் என்று சொல்லிக்கொள்வது தவறுஎன்றும், நாம் நம்மைத் திராவிடர், பகுத்தறிவு வாதிகள், திராவிட நாட்டவர் என்று சொல்லிக் கொள்ள வேண்டும் என்றும் திருவாரூர் மாநாட்டில் 1940-ம் வருடத்திலேயே தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் இந்த எண்ணம் நமக்கு இல்லாத காரணத்தினாலேயே நாம், நான் மேலே சொன்ன குறைகளுக்கும் இழிவுகளுக்கும் முற்போக்குத் தடைகளுக்கும் ஆளான இன்றைய ஈன நிலையில் இருக்கிறோம் என்பதை விளக்கி வந்திருக்கிறேன்.

44 கோடி இந்தியர்களுக்குள் நாமும் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, நாம் இந்தியர் என்னும் உரிமை கொண்டாடினோமேயானால், பல துறையிலும் மற்ற மாகாண மக்களோடு வேறுபட்டுப் பின்னணியில் இருக்கும் 4 கோடி மக்களாகிய நாம் இந்தியரில் ஒரு மைனாரிட்டி சிறுபான்மைக் கூட்ட சமுதாயமாக, அதுவும் 11—ல் 1—பங்கு சிறு கூட்டத்தினராக ஆகிவிடுகிறோம்; அது தவிர நாம் நம்மை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுவோமேயானால் இந்துசமயத்தின் (மதத்தின்) வருணாச்சிரம தர்ம முறைப்படி அதாவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அவர்ணன் என்கின்ற 5 பிரிவுகளில் நாம் 4-வது 5-வது பிரிவுக்கு ஆளாகி, மிருதியும் தாழ்மையும் இழிவும் இருக்கிற ஈன மக்களாக ஆகிவிடுகிறோம்.

இவை சட்டப்படியும், சமயப்படியும், சாஸ்திரப்படியும், அமுலில் இருந்துவரும் நடவடிக்கைக்கிரமப்படியும், நம்மைச் செய்துவிடுகின்றன என்பதோடு இதை நாமே மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டவர்களாகவும், சகித்துக்கொண்டும் இருப்பவர்களாகவும் ஆக்கிவிடுகின்றன.

அதுபோலவேதான் நாம் நம்மைப் பாரதியர், பாரத புத்திரர் என்று சொல்லிக்கொள்ளுவோமானால் இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் 4-ல் 5-ல் ஒரு பங்கு விஸ்தீரணமுள்ள பரப்பைச் சேர்ந்த நாம், இந்தியாவின் சரி பகுதிக்கு மேற்பட்ட துறைமுகங்களைச் சேர்ந்த நாம், நம் நாட்டைப் பற்றிய அதன் குறைகள், சுரண்டுதல் பற்றிய கவலை ஏற்பட முடியாதவர்களாக ஆகி, மற்ற

(2-ம் பக்கம் பார்க்க)

## நோட்டீசு.

### செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு.

**1948 of வார்சு சர்டிபிகேட்**

மனு நெம்பர் 28.

ராமகிருஷ்ண ரெட்டியார்—மனுதார்.

மதுராந்தகம் தாலுக்கா சுரோத்திரியம் தொழுப்பேடுகிராமத்தில் 10-12-1946ல் இறந்துபோன மு. ராமச்சந்திரா ரெட்டியாரிடம் சில கடன் பாக்கி விஷயமாக் ஷை மனுதார் 17–3–1948ல் தனக்கு வார்சு சர்டிபிகேட் கொடுக்கும்படி ஷை கோர்ட்டில் மனு போட்டு 23–6–48ல் விசாரணைக்கு வாயிதா போட்டிருக்கிறது. இதுவிஷயம் ஆக்ஷேபம் உள்ளவர்கள் யாதொரு தனி மனு இல்லாமலே ஷை தேதியில் ஆக்ஷேபிக்கலாம்.

செங்கல்பட்டு | P. B. வரதாசாரியார்,
29—4—48 | மனுதார் வக்கீல்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.